விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சங்கு 24
ஒலி 255 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 14 வியாழக்கிழமை (31.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# குருந்தூர்மலை பிரச்சினையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



- வடக்கு கிழக்கில் மத ரீதியான பிரச்சினையை கண்டறிய குழு நியமனம்.
- மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொல்பொருள் இடங்கள் பாதுகாக்கப்படும்.
- குருந்தூருக்கு வெளிநபரை அழைத்துவர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் பிரச்சினையில்

# ஐ.நாவின் தலையீடு வலுவாக வேண்டும்

### ஐ.நா பிரதிநிதியிடம் இரா.சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு) தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுக் கொள்வதில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடும் வகிபாகமும் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரு பிரான்ஸிடம் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)



## எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்கும்?

(கொழும்பு)

இம்முறை எரிபொருள் விலை திருத்தத்திற்கு ஏற்ப, எரிபொருளின் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெற்றோல், டீசல் விலையானது அதிகரிக்குமா இல்லையா என இன்று 31ஆம் திகதி வியாழக்கிழமை தெரியவரும். 15

### போதை மாத்திரைகளுடன்

## இரு இளைஞர்கள் மன்னாரில் கைது

(மன்னார்)

மன்னார் உப்புக்குளம் மற்றும் மூர் வீதி பகுதியை சேர்ந்த இரு இளைஞர்கள் போதை மாத்திரைகள் மற்றும் போதைப்பொருள் 15




## உறவுகளின் நீதி போராட்டத்தில் அமெரிக்கா என்றும் துணை நிற்கும்

### அமெரிக்க செனட் சபை உறுப்பினர்

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நீதிக்கான போராட்டத்தில் அமெரிக்கா என்றுமே துணை நிற்கும் என அமெரிக்க செனட் சபை உறுப்பினர் கிரிஸ் வேன் ஹோலென் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின்மேரிலாண்ட் நகர செனட் சபை உறுப்பினரான கிரிஸ் வேன் ஹோலென் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் இலங்கைக்கான 15

### காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு

## நீதி வழங்க வேண்டும்

### ஐ.நா பிரதிநிதி

(கொழும்பு)

வலிந்து காணாமலாக்கப்படுதல் குறித்த பாரம்பரியத்திற்கு தீர்வை காண்பது வெறுமனே நீதியுடன் தொடர்புபட்ட விடயம் 02



## நிலவின் தென் துருவத்தில் ஒட்சிசன்

### கண்டறிந்தது சந்திராயன் 3



08ஆம் பக்கம் பார்க்க

## நீதி கோரி உறவுகள் மன்னாரில் கவனயீர்ப்பு




02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நீதி வழங்...

மாத்திரமில்லை முன்னேற்றம் பேண் தகு அபிவிருத்தி போன்ற பாதையை இலங்கை உருவாக்குவதற்கும் மிகவும் அவசியமானது என ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ பிரான்ஸ் தெரிவித்துள்ளார்

உலகம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை குறிக்கும் நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ள அதேவேளை இந்த ஈவிரக்கமற்ற குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் -தங்கள் அன்புக்குரியவர்கள் எப்படி உள்ளனர் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியமுடியாத வேதனையை அனுபவித்தவர்கள் குறித்து எங்கள் சிந்தனைகள் திரும்புகின்றன.

இந்த தினம் இலங்கையில் ஆழமான பிரதிபலிப்புகளை கொண்டுள்ளது இங்கு பல வருடங்களாக பல குடும்பங்களும் சமூகங்களும் நிச்சயமற்ற தன்மை மற்றும் துயரத்தை எதிர்கொண்டுள்ளதுடன் பதில்கள் அற்ற கேள்விகளின் நிழல்களில் வாழ நிர்ப் பந்திக்கப்பட்டுள்ளனர்.

வலிந்து காணாமலாக்கப்படல் என்பது நாட்டின் வரலாற்றின் துயர்படிந்த கறையை விட்டுச் சென்றுள்ளது, நிச்சயமற்ற நிலையில் வாழும் ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்க்கையை தீர்மானிக்கின்றது. அவர்களின் அன்புக்குரியவர்கள் இல்லாத - நிச்சயமாக இல்லை என கருதமுடியாத நிலை காணப்படுகின்றது.

கடந்த தசாப்தத்தில் சிறிதளவு முன்னேற்றம் கூட ஏற்படாத நிலையில் தங்கள் அன்புக்குரியவர்களின் நிலையை அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதை அறிவதற்கு இலங்கையின் குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளை சந்திக்கின்றனர் என்றார். (ம-7)




சர்வதேச வலிந்து காணமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நேற்று பிரித்தானியாவில் இடம் பெற்ற கவனயீர்ப்பு போராட்டம்.

## நீதி கோரி...

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி நேற்று மன்னார் சதோச மனித புதைகுழியில் இருந்து கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாணம் முழுவதும் உள்ள காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், சட்டத்தரணிகள், அருட்தந்தையர்கள் உட்பட பலர் இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

மன்னார் சதோச மனித புதைகுழியில் ஆரம்பமான போராட்டம் மன்னார் சுற்றுவட்ட பாதை ஊடாக தபாலகம் வைத்திய சாலை ஊடாக மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இறுதி நிகழ்வுடன் நிறைவடைந்தது

போராட்டக்காரர்கள் கறுப்பு கொடிகளை ஏந்தி காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் புகைப் படங்களை சுமந்து கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தினை முன்னெடுத்தனர். (ம-7.285)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16893)

தொடர்புகளுக்கு:- குரு
**076 755 8606, 077 874 3204, 077 288 0152**

## யாழ் நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் கச்சேரிக்கு அண்மையில் 3 1/2 பரப்பு காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு.
55 (SL Rs.) மில்லியனுக்கு மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

(16830)


மின்னஞ்சல் : jamesraj_uk@yahoo.co.uk
**+44 796 374 3585** (Whatsapp)
**021 222 7141** (Sri Lankan no)

## நாகபூஷணி திருமண சேவை

**MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM, IT Professionals, CIMA, BBA, MBA, BA**

கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும். (C-7166)

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**



# பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்



74ஆவது அகவையில்
இன்று (31.08.2023) வியாழக்கிழமை
தடம் பதிக்கும் பல்துறை சார்ந்த
சமய கலாசார சமூக சேவையாளர்



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம
சிறந்த ஸ்தாபகர்
**"ஞானதானவள்ளல்"**
**கலாநிதி**

## சுவாமி மோகனதாஸ் J.P (All Island)

**இன்றைய நெருக்கடியான காலகட்டத்திலும் மக்களுக்கு தொடர்ந்து அயராது தனது சமய கலாசார சமூகப் பணியை முன்னெடுத்துச் செல்லும் அவரது பணி மேன்மேலும் தொடர சுவாமிக்கு பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்**

அன்பும் அருளும் ஆசியையும்
அன்புடனும் பண்புடனும் பணிவுடனும் வேண்டுகின்றோம்
இனிய குடும்பத்துடன் நீடூழி நிலைத்து வாழ சந்நிதி முருகன்
அருள் பொழிந்து கொண்டே இருப்பான்.

**ஆழ்ந்த சிந்தனை அற்புத அருளாளன்**
**மறக்க முடியாத பயணங்கள் தொடரட்டும்**

**இனிய உள்ளங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை மா இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட வரி அதிகரிப்பு

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

கோதுமை மா இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திர முறை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் நேற்று காலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கோதுமை மா இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட வரி கிலோ ஒன்றுக்கு 16 ரூபாவிலிருந்து 27 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. இதன் காரணமாக கோதுமை மாவின் விலையில் அதிகரிப்பு ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மஞ்சள் காமாலை தடுப்பூசி தற்போது நாட்டில் இல்லை

## வெளிநாடு செல்வோருக்கு சிக்கல்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்கள் கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டிய மஞ்சள் காமாலை தடுப்பூசி தற்போது நாட்டில் இல்லை என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர் சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சர்வதேச சுகாதார விதிகளுக்கமைய, இந்நாட்டு மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது தடுப்பூசியைப் பெற வேண்டும். ஆனால் நாட்டில் தடுப்பூசி இல்லாததால், மஞ்சள் காமாலை பரவும் நாடுகளுக்குச் செல்வதன் மூலம் நோய் தாக்கும் அபாயம் அதிகமாக உள்ளது.

உலக சுகாதார அமைப்பின் விதிமுறைகளுக்கமைய, மஞ்சள் காமாலையை தடுப்பது இன்றியமையாத பொறுப்பாகும். மேலும் நிலைமையைக் கட்டுப்படுத்த, eliminating yellow fever epidemic eye 2026 எனப்படும் சர்வதேச திட்டம் செயற்படுத்தப்படுகிறது. உலக சுகாதார அமைப்பின் அனைத்து உறுப்பு நாடுகளும் அந்த திட்டத்திற்கமைய செயற்பட வேண்டும்.

பல துறைகளில் பலவீனங்கள் காணப்படுவதனால் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் பெரும் அவப்பெயர் ஏற்படலாம் எனவும் நிபுணர் கலாநிதி சமல் சஞ்சீவ குறிப்பிட்டுள்ளார். (நி)

# இந்திய முட்டை இறக்குமதியால் உள்ளூர் உற்பத்தி பாதிப்படையும்

## விலங்கு உற்பத்தியாளர் சங்கத் தலைவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து 3 மாதங்களுக்கு முட்டையை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி யளித்துள்ளமையினால் உள்நாட்டு முட்டை உற்பத்தி தொழிற் துறை பாதிப்படையும் என இலங்கை விலங்கு உற்பத்தியா ளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் மூலம் எதிர்வரும் 3 மாதங்களுக்கு தேவையான முட்டைகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதன்படி, 92.1 மில்லியன் முட்டைகளை கொள்வனவு செய்வதற்காக நிதி மற்றும் பொருளாதார அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

உள்ளூர்ச் சந்தையில் முட்டை விலையை நிலைப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த இலங்கை விலங்கு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர முட்டை இறக்குமதிக்கு அனுமதி வழங்கிய தால் சிறிய மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் வெகுவாக பாதிக்கப்படுவார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

தற்போதும் பலர் முட்டை உற்பத்திக்கான கோழிகளை இறைச்சிக்காக விற்பனை செய்து விட்டு இந்த தொழிற்துறையை விட்டு விலகியுள்ளனர்.

இதன் காரணமாக அரசாங்கம் இலங்கை உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கின்றதா? அல்லது இந்திய உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கின்றதா? என்ற கேள்வி எழுவதாக இலங்கை விலங்கு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார். (நி)

# வேலைகளை உறுதிப்படுத்தாமல் ஓமானுக்குள் நுழையாதீர்கள்

## இலங்கைத் தூதரகம் எச்சரிக்கை

(ஓமான்)

உறுதிப்படுத்தப்பட்ட வேலைகள் இல்லாமல் ஓமானுக்குள் வர வேண்டாம் என ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகம், ஓமான் வெளியுறவு அமைச்சு மற்றும் அந்நாட்டு குடிவரவுத் திணைக்களம் ஆகியன இணைந்து அங்கு சிக்கியிருந்த 32 புலம்பெயர்ந்த தொழிலாளர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பியுள்ளன.

இது தொடர்பாக ஓமானில் உள்ள இலங்கை தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மனிதக் கடத்தல்களில் சிக்கிக் கொள்ள வேண்டாம் என்று இலங்கையர்களிடம் தெரிவித்துள்ளது.

மேலும், நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் சுற்றுலா விசாவில் ஓமானுக்குள் நுழைந்த பின்னர் சரியான வேலை வாய்ப்பைப் பெறாமல், விசா காலம் முடிந்த பின்னரும் ஓமானில் தங்கியிருந்த நிலையிலேயே திருப்பி அனுப்பப்பட்டதாக தூதரகம் தெரிவித்துள்ளது

கடந்த நவம்பர் மாதம் முதல் ஓமான் நாட்டு அதிகாரிகளின் உதவியுடன் அங்கு சிக்கியிருந்த 400 இற்கும் மேற்பட்ட இலங்கையர்களை திருப்பி அனுப்புவதற்கு வசதி செய்துள்ளதாக இலங்கைத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், ஆண் மற்றும் பெண் தொழிலாளர்கள் தொடர்ந்து மனிதக் கடத்தல் காரர்களிடம் சிக்கிக் கொள்ள வேண்டாம் எனவும் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகள் இன்றி வருகை தரவோ அல்லது சுற்றுலா விசாவில் ஓமானுக்கு வரவோ வேண்டாம் எனவும் அங்குள்ள இலங்கைத்தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

எனவே, அனைத்து இலங்கையர்களையும் உரிமம் பெற்ற முகவர்கள் ஊடாக மாத்திரம் தொழில்களை தேடுமாறும் ஓமானுக்கு வருவதற்கு முன்னர், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில், தங்களை பதிவு செய்யுமாறும் ஓமானில் உள்ள இலங்கை தூதரகம் கோரியுள்ளது. (நி)

# நேருக்கு நேர் மோதிய பேருந்துகள் ஒருவர் பலி- 9 பேர் படுகாயம்



(கொழும்பு)

கொழும்பு - கண்டி பிரதான வீதியின் கஜுகம பகுதியில் நேற்று முன்தினம் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஊழியர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்தும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

காத்தான்குடியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துடன், தனியார் பேருந்து நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் தனியார் பேருந்தின் சாரதி உயிரிழந்துள்ளது டன் இரண்டு பேருந்துகளிலும் பயணித்த 4 பெண்கள் உள்ளிட்ட 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் வரக்காபொல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.


இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)


31 ஆம் நாள் நினைவஞ்சலி

31.08.2023

அமரர்.

இளையவன் செல்வரத்தினம்



வையகத்தில் 1952.07.01
விண்ணகத்தில் 2023.08.01

"அப்பா என்ற அகராதியில் ஆயிரம்
அர்த்தங்களை அன்போடு..
அறிவோடு, தன்னம்பிக்கையோடு, விடாமுயற்சியோடு
நல் ஒழுக்கத்தையும்– நாம் கற்றிட
கண்டிப்போடு– கட்டளையிட்டு வழிநடத்திய
எங்கள் தெய்வமே...

நேற்றுவரை சிரித்து பேசிய எங்கள்
தெய்வமே– உங்கள் திருமுகமும்
திருவுடலும் இப்பூமியை விட்டு
மறைந்தாலும்– நீங்கள் பேசிய வார்த்தைகளும்
வழிகாட்டல்களும் எங்கள் உயிர் உள்ளவரை
வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்...
எங்கள் அப்பா!
நாட்கள் வாரங்களாகி– வாரங்கள் மாதங்களாகி
மாதங்கள் வருடங்களாகினாலும்
உங்களை நாங்கள் ஆயிரம்
மலர் கொண்டு அர்ச்சித்தாலும்– உங்களைப் போன்ற
"உயர்ந்த உள்ளம் கொண்ட– மனிதரே
எங்கள் வாழ்க்கையில் நாம் உயர்ந்திட வழிகாட்டிய
தெய்வமே எங்கள் அப்பா...
இனி எப்பிறப்பில் காண்போம் உங்களை அப்பா"
உங்களின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி நிற்கின்றோம்.

சண்டிலிப்பாய்,
வடக்கு,உலக்காவளை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி வவுனியா மாணவர்கள் சாதனை





தேசிய மட்ட பாடசாலைக் கிடையிலான பளுதூக்கல் போட்டியில் வவுனியா பாட சாலை மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி கொழும்பு டொரின்டன் உள்ளக விளையாட்டரங் கில் நடைபெற்ற தேசிய மட்ட பாடசாலைக்கிடை யிலான பளுதூக்கல் போட்டி யில் வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித் தியாலய மூன்று மாண வர்களும் வவுனியா இறம் பைகுளம் மகளிர் வித்தியா லய மூன்று மாணவர்க ளும் பங்குகொண்டு சாதனை படைத்துள்ளனர்.

குறித்த போட்டியில் வவு னியா இறம்பைகுளம் மக ளீர் வித்தியாலயத்தினை சேர்ந்த கவிஜாலினி 1ஆம் இடத்தினையும் ஏ.எம் பௌளா 2 ஆம் இடத்தி னையும் ஆர்.தரணியா 3 ஆம் இடத்தினையும் பிடித்த தோடு வவுனியா கோம ரசன்குளம் மகா வித்தி யாலய மாணவர்களான பி.மேரி அசெம்ரா 1ஆம் இடத்தையும் பா.கிசாளினி, பா.மதுசாளினி 3 ஆம் இடத் தையும் பெற்று பாடசா லைக்குப் பெருமை சேர் த்துள்ளனர்.

குறித்த மாணவர்கள் ஞா. ஜீவன் ஆசிரியரின் பயிற்றுவிப்பில் பயிற்சி பெற்று இறம்பைகுளம் மகளீர் வித்தியாலய உடற்கல்வி ஆசிரியர்களான திருமதி. J.D.றெஜினோல்ட் பெரேரா, திருமதி.அ.சகிதரன் ஆகி யோரும் கோமரசன்குள பயிற்றுவிப்பாளர் கி.அம்பிகா ஆகியோரின் நெறிப்படுத் தலிலும் போட்டியில் பங்குபற்றி வெற்றியினை பெற்றிருந்தமை குறிப்பிட த்தக்கது. (4-6-299)

# ஆசிய கிண்ண தொடர் இலங்கை அணி அறிவிப்பு



2023 ஆண்களுக்கான ஆசியக் கிண்ண தொடரில் பங்கேற்கும் 15 பேர் கொண்ட இலங்கை கிரிக் கெட் அணி அறிவிக்கப்பட்டு ள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரண சிங்கவினால் 15 பேர் கொண்ட அணிக்கான அங் கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.


தசுன் ஷனக தலை மையிலான அணியில் பதும் நிஸ்ஸாங்க, திமுத் கருணாரத்ன, குசல் பெரேரா, குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்ரம, மகேஷ் தீக்ஷன, துனித் வெல்லாலகே, மதீஷ பத்திரன, கசுன் ராஜித, துஷான் ஹேமந்த, பினுர பெர்னாண்டோ, பிரமோத் மதுஷன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

வனிந்து ஹசரங்க, துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுஷங்க மற்றும் லஹிரு குமார ஆகியோர் காயம் காரணமாக பங்கேற்க மாட் டார்கள் என அறிவிக்கப்பட்டு ள்ளது.

பினுர பெர்னாண்டோ மற்றும் பிரமோத் மதுஷன் ஆகியோர் காயமடைந்த வீரர்களுக்குப் பதிலாக இணைத்துக் கொள்ளப்பட்டு ள்ளனர்.

மேலும் குசல் பெரேரா காய்ச்சலில் இருந்து மீண்டு வருகிறார் என்றும் அவர் முழுமையாக குணமடை ந்தவுடன் அணியில் இணைவார் என்றும் இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (4)


# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் சண்முகநாதன் (ராசா)

நல்லூரம் பதியில் 26.08.1945

நல்லூரான் அடியில் 27.08.2023

யாழ்ப்பாணம் மணல்தறை லேன், கந்தர்மடத்தினை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சண்முகநாதன் அவர்கள் 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை ஆவணி திங்கள் வளர்பிறை பத்தாம் பிறைநாளில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - அன்னலட்சுமி தம்பதி களின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லப்பா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் அருளானந்தம், இந்திராதேவி, கருணாநிதி, குகதாசன் (பாலா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சோதிமலர் அவர்களின் அன்புக் கணவரும் நிஷாந், உஷாந், வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சாம்பவி, டினுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆத்ரேயா, ஆஞ்ஜெய், ஸ்ரீ ருத்ர ஐயப்பா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (31.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல 115,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(16894)

தகவல்:-
குடும்பத்தினர்
சோதிமலர் - +94 77 907 8973
நிஷாந், சாம்பவி - +61 401 961 332, +94 76 224 7459
உஷாந், டினுஷா - +61 424 633 123, +61 421 642 771
வைஷ்ணவி - +94 77 226 6899


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## மனம் உருகுது வேலவா

வெற்றிவடி வேலவனே
வீர செங்கோன் மயூரனே
சக்தியை உமை பாலகனாய் காட்சி
தந்திடுவாய் நல்லையம்பதியிலே
என்றும் உன் அழகைக்கான -என்
மனம் உருகுது வேலையா...
பக்தர் படை சூழ்ந்து உன் புகழ் பாட
நாத இசையினிலே எம்மை பரவசம் செய்து
வண்ண மயில் மீது காட்சி
தந்தாய் மால்மருகா!

லோ.சிவதர்ஷினி,
உரும்பிராய்.

## நலம் தருவான் முருகன்!

நல்லைத் தலமிருக்கு! நல்லதிரு வேலிருக்கு!
நம்பித் தொழுதிட்டால் நலந்தருவான் முருகனவன்!
சொல்லத் தமிழிருக்கு! சொல்லிடலாம் வாயினிக்க!
சேயோன் புகழினையே! சொல்லிச் சொல்லிப் போற்றிடலாம்!
வெல்லும் வழியிருக்கு! வேண்டாத் துயர் களைந்து
வேலனவன் காத்திடுவான்! வேண்டித் தொழுதிடுவோம்!
இல்லைக் குறையெமக்கு! ஈசன்மகன் இருக்கையிலே!
என்றே நெஞ்சினிலே உறுதி கொண்டிடுவோம்!

ப.மகேந்திரதாசன்,
நாயன்மார்கட்டு.

# இராசிபலன்

31.08.2023
ஆவணி 14,வியாழக்கிழமை
பூரணை முற்பகல் 8.24 மணிவரை
பிரதமை பின்னிரவு 6.01 மணிவரை

சதயம் முன்னிரவு 8.26 மணிவரை
சுபநேரம் -7.35-9.05 மணிவரை
இராகுகாலம்-1.35-3.05 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூசம், ஆயிலியம்.

**வளவன்**

**மேஷம்** நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம்,தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், அரசு வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம்.

**கடகம்** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்,தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** தொலைபேசி வழித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்,மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்,சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்,எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கும்பம்** உறவினர்கள் வருகையால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**மீனம்** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

சந்தோசம் ஏற்படும் போது மனதைக் கட்டுப்படுத்திக் கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 66 ஆவது பேராளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 66 ஆவது பேராளர் மாநாடு நாளை 1 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் அறிவித்துள்ளார்.

மாணவர்களினதும் அதிபர், ஆசிரியர்களினதும் தீர்க்கப்படாத பிரச்சினைகளையும் அவை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் சமகால பிரச்சினைகள் தொடர்பிலும் குறித்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

மேலும் சங்கத்தின் 2023-2024 ஆம் ஆண்டுக்கான தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரும் தெரிவு செய்யப்படவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (4)



சுற்றாடல் அதிகார சபை, கடல்சூழல் பாதுகாப்பு அதிகார சபை, கொமர்சல் வங்கி, பூநகரி பிரதேச சபை ஆகியன இணைந்து சங்குப்பிட்டி பாலம் அருகில் கடற்கரை சுத்தப்படுத்தும் நிகழ்வை நேற்று முன்னெடுத்தன. (படம்- சப்தசங்கரி)

# தெய்வீக திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் 11 ஆம் நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 4.15 மணிக்கு நல்லூர் பாணாங்குளம் நாச்சிமார் ஆலய பிரதம குரு சோ.கேதீஸ்வரகுருக்கள் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலாளர் திரு.ஈஸ்வரானந்தம் தயாரூபன் பிரதம அதிதியாகவும் அராலி முருகமூர்த்தி வித்தியாலய அதிபர் திருமதி. தி.தவரட்ணம் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில், கரவெட்டி பிரதேச பரமானந்தா அறநெறி பாடசாலை, லம்போதரன் அறநெறி பாடசாலை, கும்பவாளி அறநெறி பாடசாலை மாணவர்கள் நிகழ்வுகளை வழங்க உள்ளனர். பருத்தித்துறை பிரதேச செயலக, இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சி.கிருஷ்ணகுமாரி "அறநெறி கல்வியின் முக்கியத்துவம்" என்னும் கருத்துரையும் இடம்பெறவுள்ளது.

"தொண்டரின் பெருமை" என்னும் விடயப் பொருளில் ஆன்மிக பிரசாரகர் செல்வி.எஸ். மயூரியின் சிறப்புரையும் இடம்பெறவுள்ளது. செல்வி. ம.நேத்ரா செல்வன், ம.அர்சயன் இணைந்து வழங்கும் வயலின் இசை மற்றும் இசைக்கலைமணி திருமதி. பங்கையற்செல்வி முகுந்தனின் பக்தி இசையும் சிறப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளன என விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (4)




யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் அனுசரணையில், பி.விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூலின் வெளியீட்டு விழாவானது யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன், கஜிந்தன்)

# யாழ்.மாவட்ட காணிப் பதிவகம்
## ஊழியர் பற்றாக்குறையால் முடங்கும் நிலை

(யாழ்ப்பாணம்)

ஊழியர் பற்றாக்குறை காரணமாக யாழ்.மாவட்ட காணி பதிவகம் முடக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, யாழ். மாவட்ட காணி பதிவகத்தில் இரு உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வந்த நிலையில் ஒருவர் சுகயீனம் காரணமாக விடுப்பில் உள்ளார். அதனால் ஒருவர் மாத்திரமே கடமைக்கு சமுகமளிப்பதனால், கடந்த 24 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரையில் ஒருநாள் சேவைகள் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கடமையில் இருக்கும் ஒரு உத்தியோகத்தருக்கு, வேலைப் பளு அதிகரித்துள்ள நிலையில், விடுப்பில் உள்ளவருக்கு மாற்றீடாக ஒரு உத்தியோகத்தரை நியமிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய சூழலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலரும் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு முயன்று வருகின்றனர். அதற்காக காணி உறுதி மாற்றங்களுக்கு அதிகளவானோர் விண்ணப்பிக்கின்றனர். அவர்கள் ஒருநாள் சேவையில் அதனை பெறவே விரும்புகின்றனர். சாதாரண சேவை மூலம் பெறுவதாயின் சுமார் ஒரு மாத கால பகுதிக்கு மேல் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது. அதேபோன்று தற்போது புலம்பெயர் நாடுகளில் இருந்தும் பெரும்பாலானோர் விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது காணிகளை தாம் நிற்கும் கால பகுதியில் மாற்றம் செய்வதற்கும் ஒருநாள் சேவையையே விரும்புகின்றனர். அந்நிலையில் சுமார் ஒருவார கால பகுதியாக ஒருநாள் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் பலரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். உடனடியாக யாழ்.மாவட்ட காணிப்பதிவு திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலரும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-33)

# மணல் கடத்தல்; ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பகுதியில், அனுமதிப் பத்திரம் இன்றி மணலேற்றி சென்ற டிப்பர் ரக வாகனமொன்றுடன், சாரதி ஒருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம்காலை கைது செய்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த டிப்பர் வாகனமொன்றை வழிமறித்து சோதனையிட்ட போது, அனுமதிப் பத்திரமின்றி பயணித்தமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து 33 வயதான வாகன சாரதியை, வாகனத்துடன் கைது செய்த மானிப்பாய் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6)

## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் விஜே டயஸின் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (நி)

## வீரகத்திப் பிள்ளையாரில் சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது, அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபபூஜை நடைபெற்று, விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆலய பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார். (நி)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தினால் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வில் நாளை 1 ஆம் திகதி இசையரங்கு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன்போது பாட்டு- பாலமுருகன்-தரங்கினி, வயலின்- இ. நிரோஜன், மிருதங்கம்- வே.சாரங்கி, கடம்- ந. கேதாரநாத் இசைக்கவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு சென்னை ஸ்ரீ நவரச நாட்டிய கலாலயத்தினரால் நடன அரங்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது வேறமாலினி ராஜ் மோகன் நடன குருவாக செயற்படவுள்ளார்.

மேலும் பாட்டு-ப.சிவமைந்தன், மிருதங்கம்- சி.துரைராசா, வயலின்- இ.நிரோஜன், கீபோட்- ந.செல்வசந்திரன் ஆகியோர் இசைக்கவுள்ளனர். (4)



வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# கழிவுகள் அகற்றாத உணவகங்களின் வியாபார உரிமங்கள் நிறுத்தப்படும்
## சாவ.சுகாதாரப் பரிசோதகர் அதிரடி

(சாவகச்சேரி)

பாதுகாப்பான முறையில் கழிவுகளை அகற்றாத உணவகங்களின் வியாபார உரிமங்களை நிறுத்தி அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவிருப்பதாக சாவகச்சேரி நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் பி.தளிர்ராஜ் சாவகச்சேரி நகர உணவகங்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள பல உணவகங்கள் கடந்த சில மாதங்களாக கழிவகற்றலுக்கான கட்டணங்களை சாவகச்சேரி நகரசபையில் செலுத்தவில்லை. இதன் காரணமாக உணவகங்களின் கழிவுகளை அகற்றும் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பாதுகாப்பான முறையில் கழிவுகளை அகற்றாத உணவகங்களுடைய வியாபார உரிமம் நிறுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் தரம் பிரித்து கட்டி வைக்கப்படும் கழிவுகள் மாத்திரமே நகரசபையால் அகற்றப்படும் எனவும் மேலும் அவர் தெரிவித்தார். (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மெனிங்கோகோகல் பக்டீரியா;

# கொழும்பில் ஒருவர் அடையாளம்

**(கொழும்பு)**

**காலி சிறைச்சாலையில் பல கைதிகளைக் கொன்ற மெனிங்கோகோகல் பக்டீரியாவால் பாதிக்கப்பட்ட நோயாளி கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.**

குறித்த நபர் ஜாஎல பிரதேசத்தில் வசிக்கும் 49 வயதுடையவர் எனவும் அவர் இரத்மலானை பிரதேசத்தில் உள்ள சுகாதார மற்றும் மருத்துவ நிறுவனமொன்றில் பணியாற்றுவதாகவும் தெரியவந்துள்ளது.



இதேவேளை குறித்த நபர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)



செஞ்சோலை படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் பிரித்தானியாவில் உள்ள உலகத் தமிழர் வரலாற்று மையத்தின் இளையோர் அமைப்பினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை உலகத் தமிழர் வரலாற்று மையத்தில் அமைந்துள்ள மாவீரர் மண்டபத்தில் உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-18, கொழும்புத்துறை வீதி, ஆதன இல 581/259, 571/260, 581/261, 581/262 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனம் திருமதி.றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், குருநகர், மத்திய கிழக்கு வீதி இலக்கம் 25/2 திருமதி.றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என்பவர் நொத்தாரிசு அ.இராஜரட்ணம் என்பவர் முகதாவில் 2004.01.15 ஆம் திகதி 2015 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் காலமாகிவிட்ட எனது பெற்றோரான சவரிமுத்து கிறிஸ்தோபரின் ஏக வாரிசான எனக்கடைந்த உரித்தும் எனதாட்சியும் என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், குருநகர், மத்திய கிழக்கு வீதி இல 25/5, இலிருந்து தற்காலம் பிரான்ஸ் தேசத்தில் வசிக்கும் திருமதி.றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் தனது அற்றோனி தத்துவகாரர் தியோப்பிள்ளை றொபின்சன் மூலம் வெளிப்பட்டு 28.05.2012 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 238 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், குருநகர் பூங்கா வீதி, இலக்கம் 39 சேர்ந்த கமில் ஸ்ரீபனும் பெண் காணிக்கைமரியையும் இவர்களுக்கு வழங்கியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று, கொழும்புத்துறை இறை. **"அமரக்கோன் முதலியார் காட்டுத் தலை மடையும் மறுபிரிவுகளும்"** என்று வழங்கும் **"கொழும்புத்துறை தெருத்தோட்டம்"** உறுதிப்படி நிலப்பரப்பு 375, ஆனால் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபை அவர்களினால் 12.03.2012 இல் அளந்து வரைந்த நில அளவைப்படத்தில் துண்டு 01 தொடக்கம் 10 வரையான துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 4976/12 ஆம் இலக்க படத்தின்படி விஸ்தீரணம் நிலப்பரப்பு 376 குளி 12.18 இதில் துண்டு 6 எனக்காட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு 49 குளி 09.01 இதை இதே அளவையாளர் 07.04.2012 ஆம் திகதியில் 1-29 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 4976A/12 ஆம் இலக்கப் படத்தின் படியும் நீண்டகால ஆட்சிப்படியும் நிலப்பரப்பு 43 குளி 11.70 இதில் துண்டுகள் 7,8,9,10 என காட்டப்பட்ட பாகங்கள் சேர்ந்த விஸ்தீரணம் நிலப்பரப்பு (4) நான்கு குளி (00.55) சைபர் சைபர் தசம் ஐந்து ஐந்தும் பயிர்வகைகளும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதன் எல்லை:-

கிழக்கு : மணியம் தோட்டம்.
வடக்கு : குறித்த 4976A/12 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 6 எனச் சுட்டப்பட்ட பாகம்.
மேற்கு : குறித்த 4976A/12 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 29 எனச்சுட்டப்பட்ட பாதை நிலம்.
குறித்த 4976A/12 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 21 எனச்சுட்டப்பட்ட பாகம்.
தெற்கு: 4976A/12 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 21 எனச்சுட்டப்பட்ட பாகம் இதிலடங்கலும்.

இன்னும் குறித்த 4976A/12 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 29 எனச்சுட்டப்பட்ட பாதை நிலத்தை போக்குவரத்துக்காக பாவிக்குமுரித்தும்.

தற்போது கமில் ஸ்ரீபனும் பெண் காணிக்கைமரியை இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஸ்ரீபனும் பெண் காணிக்கை மரியை என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத் தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-7165) 31.08.2023

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-18 (பழைய வட்டாரம்-08), கொழும்புத்துறை வீதி, ஆதன இல 581/70 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், குருநகர் மத்திய கிழக்கு வீதி இலக்கம் 25/2 ஐ சேர்ந்த றிச்சேட் கான்ஸ்போவர் (தற்பொழுது பிரான்ஸ்) தனது அற்றோனி தத்துவத்தின் மூலம் திருமதி.எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் மறுநாமம் திருமதி.எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவரும் அவர்கள் 27.10.2014 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயச்சித்திரா ஸ்ரீதரன் முகதாவில் 2213 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் யாழ்ப்பாணம் குருநகர் மத்திய கிழக்கு வீதியை இல.18/1 சேர்ந்த சாந்தகுமார் நிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், குருநகர் புதிய கடற்கரை வீதி இலக்கம் 93 ஐ சேர்ந்த சாந்தகுமார் நிறோனும் பெண் விதுஸ்ரா றெனுசியாவும் அவர்கள் 17.09.2021 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு தேவராசா சுபாஜினி முகதாவில் 189 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், குருநகர் மத்திய கிழக்கு வீதி, இலக்கம் 26/8 ஐ சேர்ந்த யோசவ் சாள்ஸ் உம் பெண் யோசவ் தியோகுப்பிள்ளை பத்திமாவுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், குருநகர் மத்திய கிழக்கு வீதி, இலக்கம் 26/8 ஐ சேர்ந்த தற்காலம் பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்து வரும் யோசவ் சாள்ஸ் உம் பெண் யோசவ் தியோகுப்பிள்ளை பத்திமா ஆகியவர்கள் தமது அற்றோனித் தத்துவக்காரர் யாழ்ப்பாணம், குருநகர் மத்திய கிழக்கு வீதி, இல.24/5 சேர்ந்த தியோப்பிள்ளை றொபின்சன் மூலம் வெளிப்பட்டு அவர்கள் 16.02.2021 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 13033 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை, கெலன்தோட்டம், இல.54/14 ஐ சேர்ந்த குகராஜா நிரோஷாவுக்கு வழங்கியுள்ளனர்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் சுண்டிக்குளி கோவிற்பற்று யாழ்ப்பாண மாநகர சபை, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு J/61 கொழும்புத் துறை இறை, "அமரக்கோண் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்" என்று வழங்கும் "கொழும்புத்துறை இறை, தெருத்தோட்டம்" விஸ்தீரணம் நிலப்பரப்பு 5. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.கனகசபை அவர்களினால் 05.12.2014 ஆம் திகதியில் 1-92 துண்டுகளாக பிரிவிட்டுத் தயாரித்த 6088A/14 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டுகள்-26, 27, 36, 37, 38 எனச் சுட்டப்பட்டுள்ளது. இதில் குறித்த 6088A/14 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு-38 எனச் சுட்டப்பட்ட பாகம் விஸ்தீரணம் நிலப்பரப்பு-(1) ஒன்றும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதன் எல்லை:-

கிழக்கு : குறித்த 6088A/14 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு -37 எனச் சுட்டப்பட்ட பாகம்.
வடக்கு : குறித்த 6088A/14 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு - 25 எனச் சுட்டப்பட்ட பாகம்
மேற்கு : குறித்த 6088A/14 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு - 39 எனச் சுட்டப்பட்ட பாகம்.
தெற்கு: குறித்த 6088A/14 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு-07 எனச் சுட்டப்பட்ட பாகம்.

இன்னும் குறித்த 6088A/14 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு - 07 எனச் சுட்டப்பட்டதும், விஸ்தீரணம் நிலப்பரப்பு 12 குளி 7.13 கொண்டதும், 9 மீற்றர் அகலமுள்ள பாதையிலும் பங்கும் போக்குவரத்துக்கான பாதை பாவிப்பு உரித்தும். ஆதனவரி மதிப்பீட்டு எண் 581/70 கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தற்போது குகராஜா நிரோஷா இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது குகராஜா நிரோஷா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-7164) 31.08.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 191

### யார் பொறுப்புடையவர்

ஓர் நாட்டு அரசன் தன் மக்கள் நலப் பணிகளைச் செயற்படுத்த மூன்று அதிகாரிகளை நியமித்து, அவர்களுக்கு வானளாவிய அதிகாரங்களையும் கொடுத்தான்.

மக்கள் நலப் பணிகளில் ஊழல் நடப்பதாகப் புகார்கள் குவிந்தன. அதிகாரிகளைக் கூப்பிட்டு விசாரித்தான் மன்னன்.

"ஐயோ நாங்கள் உத்தமர்கள் மன்னா! மக்களுக்காகவே தியாக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்று சிந்து பாடினார்கள் அதிகாரிகள். "செய்யும் ஊழலை மிகவும் திறமையாகச் செய்திருக்கிறார்கள். இந்த மூவருமே ஊழல் பெருச்சாளிகளா அல்லது விதிவிலக்குகள் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய வேண்டும்," என்று நினைத்தான் மன்னன். அவர்களை அனுப்பிவிட்டு யோசனையில் ஆழ்ந்தான்.

இரண்டு நாட்கள் கழித்து அதிகாரிகள் மீண்டும் அழைக்கப்பட்டார்கள். "மக்கள் பணியில் இருக்கும் உங்களுக்குக் களப்பயிற்சி தரப் போகிறேன். உங்களிடம் ஒரு பெரிய சாக்கு தரப்படும். அதை எடுத்துக் கொண்டு நம் நாட்டின் எல்லைகளில் உள்ள காட்டுப் பகுதிகளுக்குச் செல்லுங்கள். உங்களிடம் கொடுக்கப்பட்டிருக்கும் சாக்குகளை காய், கனி, கிழங்குகளால் நிரப்ப வேண்டும். அப்படி நீங்கள் நிரப்பும் பொருட்களை வைத்துக் கொண்டு ஒரு மனிதன் இரண்டு வாரம் சாப்பிட வேண்டும்.

நீங்கள் கொண்டு வரும் சாக்குகளை நாங்கள் யாரும் பரிசோதிக்க மாட்டோம். அதை அப்படியே ஒரு ஏழையிடம் கொடுத்து விடுவோம். அவன் அதை உண்டு உங்களை வாழ்த்த வேண்டும்." "இந்தப் பயிற்சி திட்டம் வெற்றி பெற்றால், மக்கள் நலப் பணியாளர்களை இந்தப் பணியில் அமர்த்தி மக்களின் பசி போக்கலாம்".

மறுநாள் மூவரும் வெவ்வேறு காடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். காடுகளில் காய். கனி, கிழங்குகளுக்குப் பஞ்சமில்லைதான். ஆனால், அவற்றை அலைந்து திரிந்து சேகரிக்க வேண்டியிருந்தது. மேலும் அதை சேகரிக்கும் வரை அதிகாரிகளுக்கும் காட்டில் கிடைக்கும் காய் கனிகள்தான் உணவு.

மூன்று அதிகாரிகளும் அரண்மனை போன்ற வீடுகளில் சொகுசாக வாழ்ந்து பழகியவர்கள். அதனால் அவர்களுக்கு அந்த வேலை மிகவும் கடினமாக இருந்தது.

முதல் அதிகாரி நல்ல பொருட்களைச் சேகரித்தார். நாம் துன்பப்பட்டாலும் இந்தத் திட்டம் வெற்றி பெற்றால் மக்கள் பசியாறுவார்களே என்ற நினைப்பே அவருக்கு உந்துசக்தியாக இருந்தது. சாக்குப்பையை நிரப்ப அவருக்கு மூன்று, நான்கு நாட்கள் தேவைப்பட்டன. ஆனால், உள்ளே இருந்தவை எல்லாம் தரமான பொருட்கள்.

இரண்டாமவர் கொஞ்சம் குறுக்கு வழியில் யோசித்தார். பையை யாரும் சோதிக்க மாட்டார்கள் என்று மன்னரே சொல்லிவிட்டார். சோதித்தாலும் மேலோட்டமாகத்தான் பார்ப்பார்கள். மேலே நல்ல தரமான பொருட்களை வைத்துவிடலாம். கீழே அழுகிய பழங்கள், கொட்டைகள் என்று வைத்துவிட்டால் யாருக்கு என்ன தெரியப் போகிறது? என்று எண்ணி அப்படியே செய்த அந்த நபர், ஒரே நாளில் தன் பணியை முடித்துவிட்டார்.

மூன்றாம் அதிகாரி அந்த அளவிற்குக்கூடச் சிரமப்படவில்லை. பைக்குள் என்ன இருக்கிறது என்பதை யார் பார்க்கப் போகிறார்கள் என்ற நினைப்பில் காய்ந்த இலைகளையும் சருகுகளையும் போட்டு பையை நிரப்பி அரண்மனையில் சேர்த்து விட்டார். ஒரு நாழிகைப் பொழுதில் வேலையை முடித்துவிட்டுத் தன் மாளிகைக்குச் சென்று சுகமாக உண்டு உறங்கி விட்டார்.

மன்னன் மூன்று அதிகாரிகளையும் அழைத்தான். அவர்கள் முன்னிலையில் தன் காவலர்களுக்குக் கட்டளையிட்டான்.

"இந்த மூவரையும் தனித்தனியாகப் பாதாளச் சிறையில் அடையுங்கள். அவரவருடைய சாக்குப் பைகளை அவரவரிடம் வைத்து விடுங்கள். சிறைத்தண்டனை இரண்டு வாரங்கள் தொடரும். அந்த இரண்டு வாரங்களில் அவர்களுக்கு வேறு எந்த உணவும் வழங்க வேண்டாம். அவர்கள் சேகரித்த காய், கனி, கிழங்கு வகைகள்தான் அவர்களுக்கு உணவு."

மூன்றாம் அதிகாரியால் காய்ந்த இலைகளையும் சருகுகளையும் உண்டு உயிர் வாழ முடியவில்லை. ஐந்தே நாட்களில் அவர் பசி தாங்காமல் மாண்டுவிட்டார். இரண்டாமவரோ அழுகிய கனிகளையும் நல்ல கனிகளையும் கலந்து உண்டு எப்படியோ இரண்டு வாரங்கள் உயிர் வாழ்ந்து விட்டார். ஆனால், அவர் உடல்நலம் கெட்டுவிட்டது. மன்னன் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டான்.

முதலாம் அதிகாரி இரண்டு வாரங்களையும் தனிமைச் சிறையில் மகிழ்ச்சியாகக் கழித்துவிட்டு வெளியே வந்தார். தான் சேகரித்த தரமான காய், கனி, கிழங்குகளை உண்டு இன்னும் அதிகமான தெளிவுடன் வெளியே வந்தார். மன்னன் அவனுக்குப் பல பரிசுகளைக் கொடுத்து அவனை முதலமைச்சர் ஆக்கிக் கொண்டான்.

# நிலவின் தென்துருவத்தில் ஒ...

# கண்டறிந்தது பிரக்யான் ...

## இஸ்ரோ தெரிவிப்பு

(டில்லி)

**நிலவின் தென்துருவத்தில் ஒட்சிசன் மற்றும் சில த... இருப்பதை பிரக்யான் ரோவர் கண்டறிந்துள்ளதாக... விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ தெரிவித்துள்ள...**


இது தொடர்பாக இஸ்ரோ டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில்,

பிரக்யான் ரோவரில் பொருத்தப்பட்டுள்ள லேசர்ஸ் பெக்ட்ரோஸ்கோபிக் கருவி, நிலவின் தென் துருவத்தில் சல்பர் கனிமம் இருப்பதை உறுதி செய்துள்ளது.

அதேபோல், அலுமினியம், கல்சியம், இரும்பு, டைட்டினியம், மக்னீசியம், சிலிகான் ஆகிய தனிமங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நிலவின் தென்துருவத்தில் ஒட்சிசன் இருப்பதும் உறுதியாகியுள்ளது.

மேலும் ஹைட்ரஜன் உள்ளதா என்பதை கண்டு பிடிக்கும் ஆய்வுப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என இஸ்ரோ வெளியிட்ட பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)



# பெண்ணின் மூளையில் உயிருடன் இருந்த புழு

(கன்பரா)

அவுஸ்திரேலியாவில் 64 வயது பெண்மணியின் மூளையில் உயிருள்ள புழு ஒன்றைக் அவுஸ்திரேலிய மருத்துவர்கள் கண்டெடுத்துள்ளனர்.

அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தையும் கன்பரா மருத்துவமனையையும் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குறித்த புழு கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

மூளை அறுவை சிகிச்சைக்குப் பிறகு, 8 சென்றி மீற்றர் புழு மூளையிலிருந்து வெளியேற்றப்பட்டதுடன் அந்தப் புழு உயிருடன் நெளிந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அறிவியல் மொழியில் ஆஃபிடாஸ்காரிஸ் ராபர்ட்ஸி என அழைக்கப்படும் பாம்பு வகையைச் சேர்ந்த இவ் வகை புழுக்கள் அவுஸ்திரேலியா, இந்தோனேசியா மற்றும் பப்புவா நியூ கினியா ஆகிய நாடுகளில் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)



# தொழில்நுட்பக் கே... விமான சேவைக...

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டின் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அமைப்பில் திடீரென தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சரியாக சிக்னல் கிடைக்காததால் பல விமானங்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளின் விமான நிலையங்களில் தரையிறக்கப்பட்டன.

இதன் காரணமாக இங்கிலாந்தில் 20... சேவை... தெரிவி...

பின்... பல ம... சரிசெய்...

எனி... றால் பி... விமான... நாள் மு...

# 250 மில்லியன்... உக்ரைனுக்கு இர...

## அமெரிக்கா ...

(வோஷிங்டன்)

உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பா நாடுகள் இராணுவ விமானங்கள், ஏவுகணைகள் வழங்கி உதவி வருகிறது. அமெரிக்கா ரஷ்யாவின் படையெடுப்பு தொடங்கியதில் இருந்து உக்ரைனிற்கு பல பில்லியன் டொலர்களை இராணுவ உதவியாக வழங்க உறுதியளித்துள்ளது.

இந்த நிலையில், சுரங்கங்கள் மற்றும் தடைகளை அகற்றுவதற்கான உபகரணங்களை உள்ளடக்கிய புதிய 250 மில்லியன் டொலர் இராணுவ உதவிப் பொதியை உக்...



ரைனு... ரிக்கா ...

உக்... எதிர்த்... மான அ... வருகின...


இந்... உதவி... ஏவுகணை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தில் ஓட்சிசன் ...ன் ரோவர்

...ப்பு

...ம் சில தனிமங்கள் ...ள்ளதாக இந்திய ...வித்துள்ளது.



# போதைக்கு அடிமையானதால் அதிகரிக்கும் உயிரிழப்புகள்

## 5 நிமிடத்திற்கு ஒருவர் உயிரிழப்பு

### அமெரிக்க மருத்துவர்கள் அதிர்ச்சித் தகவல்

(வோஷிங்டன்)

**அமெரிக்காவில் போதை மருந்துப் பழக்கத்துக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அமெரிக்க மத்திய அரசாங்கத்தின் தரவுகளின்படி போதை மருந்துகளை அளவுக்கு மீறி உட்கொள்வதால் நிகழும் மரணங்கள் அமெரிக்காவில் 5 நிமிடத்திற்கு 1 எனும் அதிர்ச்சியூட்டும் விகிதத்தில் நிகழ்கிறது.**

அமெரிக்காவில் இது ஒரு மிகப்பெரும் சமூக பிரச்சினையாக மாறி வருவதாக உளவியல் வல்லுநர்களும் பொலிஸாரும் போதைப்பொருள் தடுப்பு துறையினரும் கருத்து தெரிவிக்கின்றனர்.

நாட்டில் அண்மைக் காலங்களில் அளவுக்கு மீறி போதைப் பொருள் எடுத்துக் கொள்வதால் ஏற்படும் விளைவுகள் அதிகரித்து இருக்கிறது.

இதனை எவ்வாறு கையாள்வது என அங்குள்ள மருத்துவர்கள் விழிபிதுங்கி இருக்கின்றனர்.

இந்த நிலையில், "ஜோம்பி டிரக்" என பெயரிட்டப்பட்ட புதுவகை போதைப்பொருளை அதிகளவு எடுத்து கொண்டு மரணமடைந்தோர் எண்ணிக்கை அங்கு அதிகரித்து வருகிறது.

"டிரான்க்யூ" என அமெரிக்காவில் அழைக்கப்படும் இந்தப் போதை மருந்து, அடங்காத மாடுகளையும் குதிரைகளையும் அடக்க உபயோகப்படுத்தப்படும் ஒரு தூக்க மருந்தாக, மிருகங்கள் இடையே பயன்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது அமெரிக்கா முழுவதும் அது சட்டவிரோதமாகவும் பரவலாக கறுப்பு சந்தையில் விற்கப்பட்டு வருகிறது.

போதைப்பொருள்விற்பனை செய்பவர்கள் ஃபெண்டனில் அல்லது ஹெரோயின்போன்ற பிற போதை மருந்துகளுடன் இதனைக் கலந்து விற்பனை செய்கின்றனர்.



இதனால் ஏற்படும் போதை அதிகமாக உள்ளதால், போதை பொருள் பழக்கம் உள்ளவர்களிடையே இதற்கு அதிகம் வரவேற்பு இருக்கிறது.

"கொக்கெய்ன் கைன் மற்றும் ஹெரோயின் போன்ற போதை மருந்துகளை அளவுக்கு அதிகமாக எடுத்து கொண்டவர்களைக் காப்பதற்காக கொடுக்கப்படும் மருந்துகள், அவர்கள் உடலில் எதிர்பார்த்தது போல் வேலை செய்யும். ஆனால் இந்த புது வகை போதைப்பொருளான டிரான்க்யூ அளவுக்கு அதிகமானால் அதை எடுத்துக் கொள்பவர்களின் உயிரைக் காப்பது கடினமாக உள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5)

# ...ட்பக் கோளாறால் ...சேவைகள் பாதிப்பு

...ானப் ...மைப் ...ளாறு ...ளது. ...்னால் ...ங்கள் ...மான ...ட்டன. ...லொந்

...தில் 200 இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் தொழில்நுட்ப குழுவினர் பல மணி நேரம் போராடி இதனை சரிசெய்ததாக தெரியவந்துள்ளது.

எனினும் இந்த தொழில்நுட்ப கோளாறால் பிரிட்டிஷ் ஏர்லைன்ஸ் நிறுவன விமானங்களின் கால அட்டவணை நாள் முழுவதும் மாற்றப்பட்டது. (நி-5)

# ...லியன் டொலர் மதிப்பில் ...க்கு இராணுவ தளபாடங்கள்

## ...ரிக்கா அதிரடி அறிவிப்பு

...க்கா, ...ணுவ ...வழ ...ரிக்கா ...தொட ...கு பல ...ணுவ ...பளித் ...ங்கள் ...வதற் ...ளடக் ...டாலர் ... உக்



...ரைனுக்கு வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.


உக்ரைனின் படைகள் களத்தில் எதிர்த்தாக்குதலில் ஈடுபட கணிசமான ஆதாயங்களைப் பெற போராடி வருகின்றன.

இந்நிலையில், அமெரிக்கா உதவி வருகிறது. வான் பாதுகாப்பு ஏவுகணைகள், பீரங்கி குண்டுகள், கவச எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் மூன்று மில்லியனுக்கும் அதிகமான சிறிய ஆயுத வெடிமருந்துகளும் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்த உதவியானது, "போர்க்களத்தில் ரஷ்யாவின் ஆக்கிரமிப்புப் போரை எதிர்கொள்ளவும் அதன் மக்களைப் பாதுகாக்கவும் உக்ரைன் உதவும்" என்று பெண்டகன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சீனாவின் வரைபடம் தொடர்பில் மோடியின் தலையீடு அவசியம்

## ராகுல்காந்தி கண்டனம்



(டில்லி)

அருணாச்சல பிரதேசத்தை சேர்த்து சீனா புதிய வரைபடத்தை வெளியிட்டுள்ளது.

இதற்கு இந்திய அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்த விவகாரம் குறித்து ராகுல் காந்தி கூறியதாவது.

அருணாச்சல பிரதேசம் மாநிலத்தை இணைத்து சீனா 2023 வரைபடத்தை வெளியிட்டுள்ளது. லடாக்கில் இந்தியாவின் ஒரு அங்குல நிலத்தைக் கூட சீனா ஆக்கிரமிக்கவில்லை என்று மோடி கூறுவது பொய் என்று தொடர்ந்து கூறி வருகிறேன்.

சீனா அத்துமீறி நடந்து கொண்டது ஒட்டுமொத்த லடாக்கிற்கே தெரியும். இந்த வரைபடம் விடயம் முக்கியமானது. அவர்கள் நமது நிலத்தை எடுத்து விட்டார்கள். இதுகுறித்து பிரதமர் மோடி ஏதாவது பேச வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்பு மிக்க செல்வச் சந்நிதி ஆலய வருடாந்திர மஹோற்சவ தேர்த் திருவிழா நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது. தேர்த்திருவிழாவில் பல அடியவர்கள் காவடிகள் , கற்பூரச் சட்டிகள் எடுத்தும் அங்க பிரதஸ்ட்டை அடித்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (படங்கள்:-சிவசாந்தன்)

# 3 கோடி பெறுமதியான ஐஸ் மன்னாரில் மீட்பு

## ஒருவர் கைது

(மன்னார்)

**மன்னார் மதவாச்சி பிரதான வீதி உயிலங்குளம் பகுதியில் வைத்து சுமார் 3 கிலோ 394 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.**

கைது செய்யப்பட்டவர் மன்னார் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது. மன்னாரில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து குறித்த போதைப்பொருள் கடத்தி செல்லப்பட்ட நிலையில் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் உயிலங்குளம் பகுதியில் வைத்து குறித்த பேருந்து விசேட அதிரடிப்படையினரால் நிறுத்தப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது குறித்த நபர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் மற்றும் போதைப்பொருள் உயிலங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் 3 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியானது என தெரியவந்துள்ளது. (4-6-285)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி கட்டைக்காடு பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கண்டியை சேர்ந்தவர் என்பதுடன் அவரிடமிருந்து 1 கிலோ கஞ்சாவும் மீட்கப்பட்டது.

குறித்த நபரை தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-316)



கிளிநொச்சி புதுக்கட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஐயப்பன் ஆலய ராஜகோபுரம் மற்றும் மூலமூர்த்திகளுக்கான மகா கும்பாபிஷேகம் நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

(படம்:- தேவானந்தன்)


## பாவனையின்றிய கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி-குடமியன் பகுதியில் சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள காணியொன்றில் இருந்து வெடிக்காத நிலையில் கைக்குண்டு உள்ளிட்ட வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பாவனை இன்றிய நிலையில் காணப்பட்ட கிணறு ஒன்றை ஜே.சி.பி இயந்திரம் ஊடாக துப்புரவு செய்த நிலையிலேயே மேற்படி வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை காணி உரிமையாளரால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். (4-6-30)



## மக்களுடன் மக்களாக பயணித்த நாகபாம்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த அரச பேருந்தில் எதிர்பாராத விதமாக பெரிய நாகபாம்பு ஒன்று காணப்பட்டதால் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

பேருந்தில் இருந்த பயணிகள் அச்சத்தால் பேருந்தில் இருந்து அவசரமாக இறங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணத்தில் இருந்து பேருந்து புறப்பட்டு சுமார் ஒன்றரை மணி நேரம் ஆகியும் பயணிகள் யாரும் நாகபாம்பு இருப்பதை கவனிக்கவில்லை.

கிளிநொச்சி நகரில் பேருந்தில் ஏறிய பெண் ஒருவரே வாகனத்தில் நாகபாம்பு இருந்ததைக் கண்டு குரல் கொடுத்தார்.

## சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான அங்கீகாரம் கிடைக்க வேண்டும்

### யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற சிறுதொழில் முயற்சியாளர்களுக்கென ஒரு சபை அமைக்கப்பட்டு, அது அங்கீகாரம் பெறப்பட்ட ஒரு நிறுவனமாக மாற்றப்பட வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

"யாழ் முயற்சியாளர் -2023" விற்பனைக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே மாவட்ட செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

கடந்த மூன்று மாதங்களாக இந்த சுற்றாடலிலே பிரதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான ஒரு சந்தைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு அது பிரபலமாகி இந்த இடத்தில் ஞாயிற்றுக் கிழமைபோனால் இந்தபொருளை வாங்க முடியும் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

இந்த நிலைமை இன்னும் சிறப்பாக அபிவிருத்தி அடைந்து வாழ்க்கையாளர்கள் யாழ்ப்பாண நகரத்திலே உள்ளூர் உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்கின்ற ஓர் இடமாக இந்த இடத்தை தெரிவு செய்கின்ற அளவுக்கு காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட வேண்டும் என்கின்ற எங்களுடைய எதிர்பார்ப்பு ஓரளவு நிறைவேறிக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கின்ற முயற்சியாளர்கள் ஒன்றிணைந்து முயற்சியாளர்களுக்கிடையிலான ஓர் அமைப்பை உருவாக்கி இருக்கிறார்கள். அது ஒரு ஆரம்ப கட்டத்திலேயே இருக்கிறது.

எதிர்காலத்தில் அது பல்வேறு முன்னேற்றங்களை கண்டு முயற்சியாளர்கள் தங்களுக்கு இடையே சிறந்த ஆரோக்கியமான கட்டமைப்பை ஏற்படுத்தி தொழில் முயற்சியினை பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று இவ்விடத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், எங்களுடைய உள்ளூர் உற்பத்திகள் சுகாதார ரீதியான, தரம் கூடிய



சிறந்த உற்பத்திகளாக இருக்கின்றன. இருந்தாலும், நாங்கள் தேசிய, சர்வதேச ரீதியாக இன்றைக்கு இருக்கிற எங்களுடைய போட்டி சந்தைக்கேற்ப இன்னும் பல முன்னேற்றங்களை காண வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அந்த திணைக்களத்தில் இருக்கக்கூடிய ஆய்வுப் பிரிவுகள், அவற்றோடு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உள்ள பொருளியல்துறை பிரிவு, உயிரியல்துறை பிரிவு மற்றும் விவசாயப் பிரிவு போன்ற பிரிவுகள் இவ்வாறான உற்பத்தியாளர்களின் நிலையங்களை தங்களுடைய வெளிக்கள பயிற்சிக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எவ் பிரதிநிதிகள் குழு செப்.14 இல் நாட்டுக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு செப்டெம்பர் 14 ஆம் திகதி நாட்டிற்கு வருகை தரவுள்ளது.

இலங்கைக்கு வழங்கியுள்ள 2.9 பில்லியன் டொலர் கடன் வசதியின் இரண்டாவது தவணையை விடுவிப்பதற்கு முன்னதாக இந்த விஜயம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் 27 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை மீளாய்வு செய்யவுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியம் வழங்குகின்ற 2.9 பில்லியன் டொலர் நீடித்த கடன் வசதி தொடர்பில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய, பல இலக்குகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

ஜூலை மாத இறுதியளவில் இந்த இலக்குகளில் 35 வீதமானவற்றை மாத்திரமே இலங்கை நிறைவேற்றியிருந்ததாக வெறிட்டே ரிசேர்ச் நிறுவனம் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய, கடன் மறுசீரமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இதன் கீழ், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்கான திட்டமொன்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் குழு மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி கலந்துரையாடலை முன்னெடுக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# பெரும்போக நெற்செய்கையை ஆரம்பிக்க விவசாய அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் பெரும்போக நெற்செய்கையை ஆரம்பிப்பதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

பயிர்ச்செய்கை நடவடிக்கை களை திட்டமிடுவது தொடர்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக விவசாய அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய எல் நினோ நிலைமை காரணமாக, எதிர்வரும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும் மழைக் காலத்துக்கு பின்னர் மீண்டும் வறட்சியான காலநிலை ஏற்படக் கூடும் என்பதால், மழை நீரை விரயமாக்காமல் உரிய முறையில் நீரை முகாமைத்துவம் செய்ய வேண்டுமென விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 550 | 550 |
| தக்காளி | 200 | 250 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 180 | 200 | 250 |
| கரட் | 350 | 340 | 400 | 400 |
| பூசணி | 80 | 100 | 100 | 80 |
| புடோல் | 80 | 70 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 300 | 320 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 80 | 120 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 180 | 200 |
| பயற்றங்காய் | 150 | 150 | 140 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 240 |
| பீற்றூட் | 120 | 100 | 120 | 150 |
| கறிமிளகாய் | 350 | 250 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 280 | 200 |
| போஞ்சி | 450 | 450 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 180 | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 100 |
| தேசிக்காய் | 600 | 450 | 800 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 400 | 380 | 350 |
| வெங்காயப்பூ | 260 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 70 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 60 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2901

நிர்மலன்

அத்தை அடுப்பில பால் வைச்சிட்டன்.
அடுத்து என்ன பண்ணனும்.



டொறின்

ஒரே மாதிரி உலகத்துல 7 பேர் இருப்பாங்களாம்.



நம்ம நிலைமையே மோசமாயிருக்கு. மிச்ச 6 பேரும் எந்த நாட்டில, எந்தத் தெருவில பிச்சை எடுத்துட்டு இருக்காங்களோ.

பாபு

Girl 1: எதுக்குடி அந்தப் பையன் இப்படி பண்றான்?
Girl 2: நாம்ம அவன பார்க்கனும்னு தான்.
Girl 1: அவன்தான் ஹெல்மட் போட்டுருக்கானே அப்புறம் எப்பிடி பார்க்கிறது?
Girl 2: அது அந்த நாய்க்குத் தெரியலையே.



சித்திரா

தினமும் 40 நிமிசம் நடந்தா மனசில இருக்கிற கவலையெல்லாம் குறையுமாம்.



எனக்கு இருக்கிற கவலைக்கு கொழும்பு வரை நடந்தாலும் பத்தாது.

விக்ரம்




வெயில் நேரத்துல எங்களுக்கும் நெருப்புல வீடு கட்டி வாழ்ற மாதிரித் தான்டா இருக்கு.

அனு

என்னது!! நேத்து புருஷன் விக்கல் எடுக்கும் போது தண்ணி எடுத்துத்தர மாட்டேன்னு சொன்னதும்,




இன்னைக்கு புருஷன் ஆயுசு கெட்டியாகணும்னு விரதம் இருக்குறதும் ஒரே ஆளா!!

உங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"பாவம் இந்தப் பெண்ணுக்குச் சித்தப் பிரமை போலும். நம்முடைய காரியத்துக்கு இவள் மூலமாக எந்தவித உதவியையும் எதிர்பார்ப்பது வீண். இவளிடம் ஒன்றும் சொல்லாமலிருப்பதே நலம்."

கலங்கரை விளக்கின் அருகிலிருந்த வீட்டை அவர்கள் நெருங்கினார்கள். வீட்டுக்குள்ளிருந்த ஒரு பெரியவரும் வயது முதிர்ந்த ஸ்திரீயும் வெளியே வந்தனர். பூங்குழலியையும் மற்ற இருவரையும் குதிரைகளையும் பார்த்து விட்டுப் பெரியவர் திகைத்து நின்றார்.

"பூங்குழலி! இவர்கள் யார்? எங்கே இவர்களைப் பிடித்தாய்?" என்று கேட்டார்.

"நான் இவர்களைப் பிடிக்கவில்லை, அப்பா! இவர்கள் தான் என்னைப் பிடித்தார்கள்" என்றாள் பூங்குழலி.

"எல்லாம் ஒன்றுதான். 'பொழுது போவதற்கு முன்னால் வீட்டுக்கு வந்துவிடு' என்று சொன்னால் நீ கேட்பதில்லை. முந்தாநாள் இரண்டு பேரை அழைத்துக்கொண்டு வந்தாய். இன்றைக்கு இரண்டு பேரை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறாய். இவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள்?"

"சக்கரவர்த்தியின் வைத்தியத்துக்காக மூலிகை கொண்டு போவதற்கு இவர்கள் வந்திருக்கிறார்கள், அப்பா"

"ஏன் ஐயா, இந்தப் பெண் சொல்லுவது உண்மைதானா?" என்று அந்தப் பெரியவர் வந்தியத்தேவனைப் பார்த்துக் கேட்டார்.

"ஆம், பெரியவரே! இதோ சீட்டு" என்று சொல்லி வந்தியத்தேவன் இடையில் கட்டியிருந்த துணிச்சுருளிலிருந்து ஓலை ஒன்றை எடுத்துப் பெரியவ்ரிடம் கொடுத்தான்.

அதே சமயத்தில் இன்னொரு ஓலை தரையில் விழுந்தது. அதை அவசரமாகக் குனிந்து எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டான்.

"பெரிய மூடன் நான். ஒரு தடவை காரியம் கெட்டும் புத்தி வரவில்லை" என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

பெரியவர் அந்த ஓலையை வாங்கிக் கொண்டார். கலங்கரை விளக்கின் வெளிச்சத்தில் அதைக் கவனமாகப் பார்த்தார். அவர் முகம் மலர்ந்தது. தமது மனையாளை நோக்கி, "இளைய பிராட்டி ஓலை கொடுத்து அனுப்பியிருக்கிறாள். இவர்களுக்கு உணவு அளிக்க வேண்டும். உள்ளே சென்று உன் மருமகளிடம் சொல்லு. சோற்றுப் பானையைக் கவிழ்த்து உருட்டிவிடப் போகிறாள்" என்றார்.

**நான்காம் அத்தியாயம்**

**நள்ளிரவில்**

இரவு போஜனம் ஆன பிறகு வந்தியத்தேவன், கலங்கரை விளக்கின் தலைவரைத் தனிப்படச் சந்தித்து இலங்கைக்குத் தான் அவசரமாகப் போக வேண்டும் என்பதைத் தெரிவித்தான். தியாகவிடங்கக் கரையர் என்னும் பெயருடைய அப்பெரியவர் தமது வருத்தத்தைத் தெரிவித்தார்.

"இந்தக் கரையோரத்தில் எத்தனையோ பெரிய படகுகளும் சிறிய படகுகளும் ஒரு காலத்தில் இருந்தன. அவையெல்லாம் இப்போது சேதுக்கரைக்குப் போய் விட்டன.

இலங்கையில் உள்ள நமது சைன்யத்தின் உதவிக்காகத்தான் போயிருக்கின்றன. எனக்குச் சொந்தமாக இரண்டு படகுகள் உண்டு. அவற்றில் ஒன்றில் நேற்று வந்த இரண்டு மனிதர்களை ஏற்றிக் கொண்டு என் மகன் போயிருக்கிறான். அவன் எப்போது திரும்பி வருவான் என்று தெரியாது. என்ன செய்யட்டும்?" என்றார்.

"அந்த மனிதர்கள் யார்? அவர்கள் ஒரு மாதிரி ஆட்கள் என்று தங்கள் குமாரி கூறினாளே?"

"ஆமாம் அவர்களைக் கண்டால் எனக்கும் பிடிக்கவில்லை தான். அவர்கள் யார் என்பதும் தெரியவில்லை. எதற்காகப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை.

(தொடரும்)




## எல்லாம் நன்மைக்கே

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அந்நாட்டு அமைச்சர் எது நடந்தாலும் "எல்லாம் நன்மைக்கே!" என்று சொல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அரசன் மாம்பழம் ஒன்றைக் கத்தியால் அறுத்தான். தவறுதலாகக் கத்தி அவனின் சுண்டு விரலை அறுத்து விட்டது. இரத்தம் வெளியேறி வலி தாங்க முடியாமல் அரசன் துடித்தான்.

வழக்கம் போல் அமைச்சர், "அரசே! எல்லாம் நன்மைக்கே!" என்றான்.



இதைக் கேட்டுக் கோபமடைந்த அரசன், "நான் விரல் வெட்டுப்பட்டுத் துடிக்கிறேன். எல்லாம் நன்மைக்கே என்று சொல்வதா?, காவலர்களே அமைச்சரைச் சிறையில் கொண்டு போய் அடைத்து விடுங்கள்" என்று உத்தரவிட்டான்.

காவலர்களும் அமைச்சரை அரசனின் உத்தரவுப்படி சிறையில் கொண்டு போய் அடைத்து வைத்தனர்.

அப்போதும் அமைச்சர், "எல்லாம் நன்மைக்கே!" என்றார்.

நாட்கள் பல கடந்தன.

வேட்டையாடுவதில் ஆர்வமுடைய அரசன் தனியாகக் காட்டிற்குச் சென்றான்.

அங்கே மலைவாசிகள் காளிக்குப் பலி கொடுப்பதற்காக ஒருவனைத் தேடிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் அரசன் சிக்கிக் கொண்டான்.

அங்கு வந்த கோவில் பூசாரி பலி கொடுப்பதற்காக மலைவாசிகள் கொண்டு வந்த அரசனை முழுமையாகச் சோதித்தான்.

பின்பு, "காளிக்கு எந்தக் குறையுமில்லாதவனை மட்டுமே பலியிட முடியும். இவனோ சுண்டு விரல் பாதியாக உள்ளான். இவனை விட்டு விடுவோம்" என்றான்.

விடுதலை பெற்ற அரசன், அரண்மனைக்கு வந்தான். உடனடியாக அமைச்சரை விடுவிக்க உத்தரவிட்டான்.

நடந்ததை எல்லாம் அமைச்சரிடம் சொன்ன அரசன், "சுண்டு விரல் வெட்டுப்பட்டதால் உயிர் பிழைத்தேன். அன்று எல்லாம் நன்மைக்கே என்று நீர் சொல்லியதன் உண்மை உணர்ந்தேன். உம்மைச் சிறையில் அடைத்ததற்காக வருந்துகிறேன்" என்றான்.

அரசே என்னை நீங்கள் சிறையில் அடைத்ததும் நன்மைக்கே. எப்பொழுதும் உங்களைப் பிரியாமலிருக்கும் நான், என்னைச் சிறையிலடைக்காமல் இருந்திருந்தால் உங்களுடன் காட்டிற்கு வந்திருப்பேன்.

அந்த மலைவாசிகள் என்னையும் உங்களுடன் சிறைப்படுத்தி இருப்பார்கள். விரல் வெட்டுப்பட்டதால் நீங்கள் உயிர் பிழைத்தீர்கள். எந்தக் குறையும் இல்லாத என்னை அவர்கள் பலியிட்டு இருப்பார்கள்.

நீங்கள் என்னைச் சிறையில் அடைத்ததால் தான் நான் உயிர் பிழைத்தேன். எல்லாம் நன்மைக்கே" என்றார் அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளும்

– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கழிவுகளை வீதிகளில் கொட்டும் மனநிலை எப்பேற்பட்டது

அறிவு, திறன், மனப்பாங்கு எனும் மனித மேம்பாட்டுக் கூறுகளில் அறிவும் திறனும் எத்துணை உயர்வாக இருந்தாலும் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படவில்லையாயின் அறிவாலும் திறனாலும் எந்தப் பிரயோசனமும் ஆகப் போவதில்லை.

உண்மை. ஒரு மனிதன் அறிவுடையவனாயின் அவனிடம் சிறந்த மனப்பாங்கு இருக்க வேண்டும்.

மாறாக அறிவு உயர்வாக இருக்கின்ற போதிலும் மனப்பாங்கு எதிர்மறையாக இருக்குமாயின், அதன் விளைவு மிகவும் மோசமாக இருக்கும்.

அதனாலேயேதான் தவத்திரு குன்றக்குடி அடிகளார்; கற்றவர்கள் கயவர்களாக இருந்தால் இந்த மண் தாங்காது எனக் கூறினார்.

ஆக, ஏட்டறிவு இல்லாத ஒருவர் உயர்ந்த மனப்பாங்கை உடையவராக இருக்கலாம். அவ்வாறானவர்களால் இந்த உலகில் தர்மமும் அறமும் நிலைத்து நிற்கிறது. மக்கள் சேவை நடந்தாகிறது.

இத்தகையவர்களே மற்றவர்கள் இன்புறக் கண்டு தாமும் இன்புறுவார்கள்.

இவ்வாறானவர்களாலேயே இயற்கை இன்னமும் தனது நிலையினின்று விலகாமல் கடமை செய்கிறது.

அதிலும் அறிவுடையவர்கள் – கற்றவர்கள் நேர்மனப்பாங்குடன் செயற்படும்போது, அவர்களை ஏனையவர்களும் பின்பற்றுவர்.

ஆம், இன்றுவரை காந்தியம் நிலைத்து நிற்கின்றதெனில், அதற்கு மகாத்மா காந்தியடிகளின் தியாகமே காரணமாகும்.

ஆக, எப்போதும் கற்றவர்கள் நேர்மையானவர்களாக, நடுவுநிலை நின்று கருத்துரைப்பவர்களாக, மற்றவர்களையும் வழிப்படுத்துகின்றவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் இவ்வுலகம் மனிதநேயத்தால் இன்புறும்.

இருந்தும் சமகாலத்தில் கல்வி அறிவு வீதம் கூடியிருக்கின்ற போதிலும் மனப்பாங்கு என்பது அடி மட்டத்தில் இருப்பதுதான் வேதனைக்குரியது.

ஆம், இப்போதெல்லாம் கற்றவர்கள் சுயநலம்மிக்கவர்களாக ஆகிவிட்டனர். இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும்.

அதில் ஒன்றுதான் தங்கள் வீட்டுக்கழிவுகளை, நிறுவனங்களின் குப்பைகளை வீதிகளில் கொட்டுகின்ற கொடுமை.

அதிலும் படித்தவர்கள் இதனை சர்வசாதாரணமாகச் செய்கின்றனர். அதிலும் கொடுமை தங்கள் குழந்தைகளுக்குப் பயன்படுத்திய பம்பஸ் கழிவுகளை வீதியில் போட்டுவிட, அவற்றைத் தெரு நாய்கள் பிய்த்துப் பிடுங்கி அந்த வீதி முழுவதையும் அசிங்கப்படுத்திவிடுகின்றன.

இதற்கும் மேலாக, தனியார் வீடுகளிலும் – விடுதிகளிலும் தங்கியிருக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் குப்பைகளை வீதியில் கொட்டுவதைப் பார்க்கும்போது, வயிறு பற்றி எரியும்.

அந்தோ! கொடுமை. பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற மாணவர்கள் இவ்வாறு நடந்தால், அவர்கள் எதிர்காலத்தில் எப்படி இருப்பார்கள் என்பதை ஒரு கணம் நினைக்கும் போது வேதனை இரட்டிப்பாகிறது.

மக்களின் வரிப்பணத்தில் பல்கலைக் கழகத்தில் இலவசமாகப் பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற பல்கலைக்கழக மாணவர்களின் மனப்பாங்கு இன்னமும் இருள்சூழ்ந்ததாக இருக்கும்போது, இவர்களால் இந்த நாடும் மக்களும் நன்மையடைய முடியுமா என்ற கேள்வி எழவே செய்கிறது.

# வடக்கு -கிழக்கில் நீண்டகாலமாக பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

## அமைச்சரவை அனுமதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் நீண்ட காலமாக் பணியாற்றி வருகின்ற தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புக்கொண்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த தொண்டர் ஆசிரியர்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, தமக்கான நிரந்தர நியமனத்தை பெற்றுத் தருமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இதுதொடர்பாக ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவையில் பிரஸ்தாபித்ததுடன் நிரந்தர நியமனங்கள் வழக்கப்பட வேண்டியதன் அவசியத் தினையும் வலியுறுத்தியுள்ளார்.

இதனை தொடர்ந்து அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் சுமார் 60 ஆசிரியர்களும் கிழக்கு மாகாணத்தில் சுமார் 187 ஆசிரியர்களும் நீண்ட காலமாக நிரந்தர நியமனம் இன்றி தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,9,33,104)

### மாணிக்க கற்களுடன்

## கட்டுநாயக்கவில் பெண் ஒருவர் கைது

சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கற்களை வெளிநாட்டுக்கு கடத்த முற்பட்ட பெண் ஒருவர் கட்டுநாயக்கவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த வர்த்தகப் பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். 30 வயதுடைய குறித்த பெண் ஒரு கொடவத்தை பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

நேற்று காலை கட்டுநாயக்கவில் இருந்துசென்னை நோக்கி பயணிக்க முற்பட்ட போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது ஆடைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மாணிக்கக்கற்களின்எடை 2311.75 கிராம் என தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைப்பற்றப் பட்ட மாணிக்கக்கற்களின் சந்தை பெறுமதி 29.1 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

விமான நிலைய சுங்க அதிகாரிகளின் மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த பெண் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,9)

## மண்வெட்டியால் தாக்கி குடும்பஸ்தர் படுகொலை

(கொழும்பு)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலஹா தோட்டத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மண்வெட்டியால் தாக்கி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

40 வயதுடைய வீரசாமி பெஞ்சமின் என்ற 3 பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தக்குதலை நடத்திய 27 வயதுடைய நபர் தலைமறைவான நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9)

## தேசிய மருந்து ஆணையத்திற்கு அமெரிக்கா விசேட பயிற்சி

(கொழும்பு)

அமெரிக்க உணவு மற்றும் மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் விசேட பயிற்சியொன்றை தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் சுமார் 50 உத்தியோகத்தர்கள் மற்றும் மருந்தாளுனர்கள் பெற்றனர்.

நேற்று கொழும்பில் இவ் விசேட பயிற்சியானது மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் ஆணையத்தின் தலைவர் எஸ்.டி. ஜெயரத்ன, எதிர்காலத்தில் மருந்துகளை இறக்குமதி செய்வது மற்றும்ஒழுங்குபடுத்துவது தொடர்பாக அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் (FDA) ஆலோசனையைப் பெறுவேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த அறிவை எமது மருந்தாளுனர்கள் பயன்படுத்தி எதிர்காலத்தில் தரம் குறைந்த மருந்துகளின் உற்பத்தியைக் குறைப்பார்கள் என்றும் தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் கருத்தின் பிரகாரம் தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையை தரமான நிறுவனமாக மாற்றுவதே இப் பயிற்சியின் நோக்கமாகும்.(ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** மலையாபருத்திக்குளத்தில் மின்சாரம் தடைப்படும்.

## உறவுகளுக்கு எதிரான சுவரொட்டிகளால்

### மட்டக்களப்பில் பரபரப்பு

மட்டக்களப்பு காந்தப் பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபியில் அமலராஸ் அமலநாயகிக்கு எதிராக மர்ம நபர்களால் சுவரொட்டியொன்று ஒட்டப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பில் நேற்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவி அமலராஸ் அமலநாயகியினால் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மர்ம நபர்களால் ஒட்டப்பட்ட சுவரொட்டியில் "நமக்கான டொழரை(டொலரை)பெற பேரணியில்கலந்து கொள்ள வாருங்கள்" எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சுவரொட்டி குறித்து கண்டனம் தெரிவித்துள்ள ஊடகவியலாளர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் மட்டக்களப்பு தலைவிக்கும் ஊடகவியலாளர்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதமாக இது உள்ளதாக சுட்டிக்காட்டியதுடன் , விசமிகள் இவ்வாறான செயல்களை கைவிட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தனர். (ம-7,9)

## கர்ப்பிணிகளுக்கு வழங்கப்பட்ட காலாவதியான திரிபோஷா

(கொழும்பு)

10 மாதங்களுக்கு முன்னர் காலாவதியான திரிபோஷா கையிருப்பு விநியோகிக்கப்பட்ட சம்பவம் மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இது தொடர்பில் திரிபோஷாவை பெற்றுக்கொண்ட தாய்மார்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த சம்பவம் கெஸ்பேவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு சொந்தமான கஹபொலரெகிதெலவ்வத்த தாய் மற்றும் சிறுவர் சிகிச்சை மையத்தில் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், குறித்த திரிபோஷாக்களை எதிர்வரும் வியாழக்கிழமை மீண்டும் கொண்டுவந்து மாற்றிக்கொள்ளுமாறு குடும்ப சுகாதார சேவை அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆனாலும், கர்ப்பிணித் தாய்மார்களை இவ்வாறு செய்வது முறையற்றது என தாய்மார்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட எடை குறைந்த குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்க சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்காக தகுதியுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு திரிபோஷா பொதிகள் வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்பட்ட திரிபோஷா தொகைகளே காலாவதியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், இவ்வாறான சம்பவம் நடந்திருப்பது மிகவும் கண் டிக்கதக்க விடயமாகும். இது தொடர்பில் விரைவில் கவனம் செலுத்தப்படும்எனவும்குறிப்பிட்டுள்ளனர். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு



20

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

எனினும் பேரினப் பொருளாதாரப் புள்ளிவிபரங்களின்படி, பெருந்தொற்றினால் கிராமியப் பொருளாதாரம் குறைந்தளவு பாதிக்கப்பட்டதாகவும் கிராமியப் பொருளாதாரத்தின் உயிர்நாடியான விவசாயத்தை விட, கைத்தொழில் துறையே கடுமையான வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மக்களால் பின்பற்றப்பட்ட உத்திகள்

ஓர் ஆய்வின் தகவலின்படி, பெருந்தொற்றினது பொருளாதாரத் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்காகப் பின்பற்றப்பட்ட உத்திகள் அல்லது நடவடிக்கைகள் பற்றி வினாவப்பட்ட போது, 9.7% ஆனோர் (நகர்ப்புறத்தவர்கள் 2.3% மற்றும் கிராமப்புறத்தவர்கள் 11.8% ) தாம் அடிக்கடி அரசாங்க உதவியைப் பெற்றதாகக் குறிப்பிட்டனர். அதே வேளை 28.5% ஆனோர் (நகர்ப்புறத்தவர்கள் 18.3% மற்றும் கிராமப்புறத்தவர்கள் 31.4% ) தாம் எப்போதாவது ஒரு தடவை அரசாங்க உதவியைப் பெற்றதாகக் குறிப்பிட்டனர்.

அதிகமானவர்களால் தாம் பயன்படுத்திய உத்தியாக செலவுகளைக் குறைத்தல் காணப்பட்டது. மற்றைய உத்திகளாக தாம் வைத்திருந்த சேமிப்புக்களைப் பயன்படுத்தியதாகவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தமையினைக் கணிப்பீட்டின் மூலம் அறிய முடிகின்றது.

கடனட்டை மூலம் பொருட்களைக் கொள்வனவு செய்தல் (42.1%), நகைகளை அடகு வைத்தல் அல்லது வங்கிக் கடன்களைப் பெறுதல் (42.2%), கடன் வழங்குநர்களிடமிருந்து கடன்களைப் பெறுதல் (29.5% ), குடும்பம் மற்றும் நண்பர்களிடமிருந்து உதவியைப் பெறுதல் (37.7%) போன்ற உத்திகளையும் பயன்படுத்தியுள்ளதாக கணிப்பீடு குறிப்பிடுகின்றது. சேமநலன் தொடர்பாக அரசாங்கம் முன்வைத்த தகவல்களை விட இது வேறுபட்டதாகக் காணப்படுகிறது.

அரசாங்கம் கொவிட்-19 இலிருந்து விடுபடுவதற்கான உத்தியை மக்கள் தாமாகவே கையாள வேண்டும் என்றும் அரசாங்கம் சேமநலன்சார் கடமைகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு ஒதுங்கியிருந்தமையையும் கணிப்பீட்டின் தரவுகள் வலியுறுத்துகின்றன.

### மீன்பிடித்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி

கொவிட்-19 பெருந்தொற்று அலையினால் சிறிய அளவிலான மீன் பிடித்துறையானது நாடளாவிய ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. நாட்டினை முழுமையாக முடக்கியமையினால், வீழ்ச்சியடைந்த கேள்வி மற்றும் நிரம்பல் நிலையினால் முதலாம் அலையின் இறுதிப் பகுதியில் 50% -65% ஆன உற்பத்திச் சரிவு குறித்து உலக வங்கி அறிக்கையொன்றைப் பதிவு செய்துள்ளது. மேலும் ஏப்ரல் 2020 இல் சர்வதேச வர்த்தக உறவுகள் (முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ) வீழ்ச்சியடைந்திருந்ததோடு எவ்விதமான மாற்று வருமானங்களும் இல்லாத நிலைமையும் காணப்பட்டது.

எனினும் யூன் 2020 இல் இருந்து மீன்பிடித்துறையானது மெதுவாக ஆனால் நிலையான வகையில் மீண்டெழுந்து கொண்டிருந்தது. எவ்வாறெனினும் பெருந்தொற்றின் இரண்டாவது அலையானது பேலியகொட மீன்சந்தைக் கொத்தணியோடு ஆரம்பமாகியது. இதனைத் தொடர்ந்து சில மாதங்களுக்குள் மீன் விற்பனையானது மீண்டும் சடுதியாகக் குறைவடைந்தது. மீனை வாங்குதல் தொடர்பான பயத்தினால் பொதுமக்கள் மீனைக் கொள்வனவு செய்ய அச்சமுற்றனர். இதனால் மீனவர்களும் அவர்களது குடும்பங்களும் பாதிக்கப்பட்டன. சரியான தகவல்களைப் பரப்பி இந்தப் பயத்தை இல்லாது செய்வதில் அரசாங்கம் தோல்வியடைந்திருந்தது.

போதுமான நிதிசார் உதவிகளையும் வழங்க அரசாங்கத்தினாலும் இயலவில்லை. இத்தகைய நிலையில் அரசாங்கம் மேற்கொண்ட மிகக் குறிப்பிட்டுக் கூறக்கூடிய தலையீடு என்னவெனில், உலர்ந்த மீன்கள் (கருவாடு) பாவனையினை ஊக்குவித்தமையும் ஒக்டோபர் 2020இன் கடைசிப் பகுதிகளில் மீன்கள் முழுவதையும் கொள்வனவு செய்தமையுமாகும். மீன்பிடித்துறையானது இந்த அதிர்ச்சிகளிலிருந்து மீண்டு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்த நிலையில் மூன்றாவது அலை ஏற்பட்டிருந்தது. மூன்றாவது அலையை அரசாங்கம் தவறாகக் கையாண்டமை மற்றும் நடமாடுதல் தொடர்பான கட்டுப்பாடுகள் போன்றவற்றினால் சிறிய அளவிலான மீன்பிடித்துறை மேலும் பாதிக்கப்பட்டது.

மே மாதம் 2020 இல் 146 கொள்கலன்களுடன் எக்ஸ்பிரஸ் பேர்ல் ( X-Press Pearl) கப்பல் கொழும்பிற்கு அண்மித்த கடற்கரையில் தீப்பற்றிய அனர்த்தமானது மீன்பிடித்துறை எதிர்கொண்ட பிறிதொருவிதமான பாரிய அதிர்ச்சியாகும். இதனது பாதிப்புகள் பல தசாப்தங்களுக்குக் காணப்படலாம் அல்லது பல தசாப்தங்களின் பின்னர் ஏற்படலாம். கப்பலின் சிதைவுப் பொருட்களானது இலங்கைக் கடல்வாழ் உயிரினங்களின் பெருக்கத்துக்குக் கெடுதலை ஏற்படுத்தலாம். இது கடல்வாழ் உயிரினங்களின் மீது பல ஆண்டுகளுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தலாம் என நம்பப்படுகின்றது. இது மீன்பிடித்துறை எதிர்கொள்ளுகின்ற கடுமையான விளைவுகளை எடுத்துக் காட்டுகிறது.

### விவசாயத்துறை

விவசாயத்துறையில் 2.4% வீழ்ச்சியினை உலக வங்கி மதிப்பிட்ட போதும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்ட தகவல்களின்படி, கொவிட்-19 தொடங்கியதன் பின்னர் கணிப்பீட்டில் பங்குபற்றிய 69.5% ஆன கிராமப்புற ஆட்கள் கடுமையான நிதி நிலைமையினை எதிர்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளனர். (இது நகர்ப்புற பின்னணியைக் கொண்டவர்களை விட 7.6% அதிகரிப்பாகும்). தேசிய மட்டத்தில் அரசாங்கக் கொள்கைகளின் தவறுகள் இதற்குரிய சாத்தியமான விளக்கமாக அமைவதோடு இது இந் நிலைமை மேலும் தீவிரமடைவதற்கான காரணியாகவும் அமையலாம். மே 2021 இல் இலங்கை அரசாங்கம் ஒரு வருடத்தில் இறக்குமதிச் செலவில் 400 மில்லியன் டொலரைச் சேகரிக்கும் நோக்கில் இரசாயனப் பசளைகளைத் தடை செய்தது.

இந்தக் கொள்கையானது எதிர்பாராது மற்றும் யோசனையின்றி மேற்கொள்ளப்பட்டதொன்று மாத்திரமல்ல, திடமான விஞ்ஞான அடிப்படையில் மேற்கொள்ளப்படாத ஒன்றாகவும் காணப்படுகின்றது. இறக்குமதிச் செலவினங்களைச் சேகரிப்பதற்காகவே இத்தகைய கொள்கை உருவாக்கப்பட்டது என்ற நோக்கம் அடிப்படையற்றது. ஏனெனில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன இறக்குமதி போன்ற அவசியமற்ற இறக்குமதிகளுக்குச் செலவிடுவதில் அரசாங்கம் ஆர்வமாக இருந்தது.

பெரும்பாலான கிராமப்புற மக்கள் நெல், தேயிலை, இறப்பர், இலவங்கப்பட்டை, கறுவா போன்ற விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதால் இரசாயனத் தடையானது கிராமப்புறப் பொருளாதாரத்தில் ஒரு அச்சுறுத்தும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனை வெறும் வார்த்தைகளை அடித்தளமாகக் கொண்ட கொள்கை (Policy underpinned by hearsay) என ஜெயசூரிய தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். மேலும் இது 25% நெல் உற்பத்தி, 35% தேயிலை உற்பத்தியினது விளைச்சல்களில் சராசரியான சரிவினை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இரசாயன உரங்கள் இல்லாததொரு நிலையில் அதனை ஈடு கட்டச் சேதனப் பசளைகளை உற்பத்தி செய்யும் திறனையும் எமது நாடு கொண்டிருக்கவில்லை. அத்துடன் புதிய இரசாயனத் தடையுடன் உணவுப் பற்றாக்குறையும் ஏற்படலாம் என சிலர் அஞ்சினர். அது தற்போது வெளிப்படையாகத் தெரிகிறது.

அரசியலமைப்பின்படி பதிலளிக்கத் தேவையில்லாத ஜனாதிபதி என்ற தீமையான விடயத்தினை இந்த நெருக்கடி பிரதிபலிக்கிறது. தவறான ஒருவரின் கைகளில் அதிகாரம் குவிக்கப்படும் போது கடுமையான சேதத்தினை அது ஏற்படுத்துகிறது. இது பொதுமக்களுக்குப் பதிலளிக்கத் தேவையில்லாத அரசாங்கமாக இலங்கை அரசாங்கம் மாறி வருவதனைத் தெளிவாகக் காட்டுகிறது. அத்தோடு பொது விசாரணை மற்றும் விவாதங்களின்றி தன்னிச்சையான முடிவுகள் எவ்வாறு ஒரு நெறிமுறையாக சாதாரணமாக்கப்படுகின்றன என்பதனையும் வெளிப்படுத்துகிறது.

### இலங்கை அரசாங்கத்தின் கொவிட்-19 சேமநல நடவடிக்கைகள்

மார்ச் 2020இல் இலங்கை அரசாங்கம் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான பல சலுகைகளை அறிவித்தது. நிவாரண நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பொறுப்பாக்கப்பட்டிருந்த ஜனாதிபதி விசேட செயலணியானது பத்து சலுகைத் திட்டங்களை அடையாளப்படுத்தி அதற்குத் தகுதியானவர்களையும் தெரிவு செய்தது. அதன்படி, 5,000 ரூபாய் கொடுப்பனவுக்காக வயது முதிர்ந்த பிரஜைகள், விசேட தேவையுடையவர்கள், சிறுநீரக நோயாளிகள், சமுர்த்திப் பயனாளிகள், விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டத்திற்குப் பதிவு செய்தவர்கள் போன்றோர் அடையாளப்படுத்தப்பட்டனர்.

மேலும் பெருந்தொற்றினால் உருவாகிய பொருளாதாரச் சிரமங்களை எதிர்கொள்ளும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் மாதாந்தம் 5,000 ரூபாய் கொடுப்பனவு அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தச் செயற்பாடுகளுக்காக இலங்கை சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து பல நன்கொடைகள் மற்றும் மானியங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டது.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருளின்...

விலைச் சூத்திரத்திற்கு ஏற்ப எரிபொருள் விலை அதிகரிப்பும் குறைப்பும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிதிக் குழுவே தீர்மானிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை உலக சந்தையில் பெற்றோலின் விலை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,9)

## இரு இளைஞர்...

அடங்கிய சிகரெட்டுடன் நேற்று புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மன்னார் உப்புக்குளம் மற்றும் மூர்வீதி பகுதியை சேர்ந்த 21 மற்றும் 22 வயது இளைஞர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ம-7,9,104,285)

## குருந்தூர்...

மல்வத்து, அஸ்கிரிய மகாநாயக்க மற்றும் அனுநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றபோதே ஜனாதிபதி ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த மத தலங்கள் அனைத்தையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். வடக்கில் குருந்தூர் மலை பிரச்சினையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வெளிப் பிரதேசங்களிலிருந்து எவரையும் அழைத்துவர வேண்டாம் என அப்பகுதி சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அப்பகுதி மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ள நிலையில் வெளியிலிருந்து வந்த குழுவினரே முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளனர். அது தொடர்பில் வவுனியா மகா நாயக்க தேரரையும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அதனால் நாம் வெளியிலிருந்து அந்த பிரதேசத்திற்கு செல்வதற்கு எவரையும் அனுமதிப்பதில்லை. அது தொடர்பில்லான விடயங்களை கண்டறியுமாறு தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் சட்டத்திற்கு அமைய செயற்படுமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் மகா விகாரையில் அகழ்வுகளை மேற்கொள்ளவும் எதிர்பார்த்துள்ளோம். வடக்கில் இடம்பெறும் அகழ்வுகளின் அறிக்கைகளை பெற்றுக்கொண்டு அந்தப் பணிகளை முன்னெடுப்போம்.

தொல்பொருள் திணைக்களம் வழங்கும் தீர்மானத்திற்கு அமைய செயற்பாடுகளை முன்னெடுக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். அந்தப் பகுதிகளை பாதுகாக்கவும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

பௌத்த தலங்களை பாதுகாக்கும் அதேநேரம் முதலில் தொல்பொருளியல் ஆய்வுகளை மேற்கொண்டு அப்பகுதிகளில் மற்றைய மதம் சார்ந்த பிரச்சினைகள் இருக்குமாயின் அது பற்றி ஆராயவும் தயாராகவுள்ளோம்.

குருந்தூரில் வெளியிலிருந்து வருவோர் அப்பகுதிகளுக்குள் பிரச்சினைகளை தோற்றுவிக்க நாம் இடமளியோம். அதற்காக மாகாண மதத் தலைவர்கள் குழுவொன்றை நியமித்து பிரச்சினைகளை நிவர்த்திக்கவும் எதிர்பார்த்துள்ளோம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட்டால் பிரச்சினைகள் ஏற்படாது எனத் தெரிவித்தார். (ம-7,9)

## ஐ.நாவின்...

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மார்க் அன்ட்ரூ ப்ரான்ஸ் கடந்த சில நாட்களாக நாட்டின் பல்வேறு முக்கிய தரப்பினரை சந்தித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றார்.

அந்த வகையில் மார்க்-அன்ட்ரூ ப்ரான்ஸூக்கும் இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்று புதன்கிழமை சந்திப்பொன்று நடைபெற்றது. சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் காலை 11 மணியளவில் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டிருந்தார்.

இச்சந்திப்பின்போது தமிழ்ச் சமூகத்தின் மீது பாதிப்புக்களை ஏற்படுத்தும் விடயங்கள் குறித்தும், நாடு என்ற ரீதியில் பொதுவாக தாக்கங்களை ஏற்படுத்தும் விடயங்கள் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடும் வகிபாகமும் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா வதிவிடப் பிரதிநிதியிடம் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் சம்பந்தன் வலியுறுத்தினார்.

அதற்குப் பதிலளித்த மார்க் அன்ட்ரூ ப்ரான்ஸ், இவ்விடயத்தில் இருதரப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தி எவ்வாறு ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பது பற்றி எதிர்வரும் காலங்களில் விரிவாகப் பேசலாம் என்று குறிப்பிட்டார்.

அதேவேளை அண்மைய காலங்களில் சிறுபான்மையின மக்களுக்கு எதிராகப் பகிரங்கமான முறையில் வெளிப்படுத்தப்பட்டுவரும் இனவாதக் கருத்துக்கள் மற்றும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இடம்பெறும் பௌத்த சிங்கள மயமாக்கம் என்பன உள்ளடங்கலாக தமிழ் மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது மார்க் அன்ட்ரூ ப்ரான்ஸிடம் எடுத்துரைக்கப்பட்டது.

அதுமாத்திரமன்றி இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு தசாப்த காலம் கடந்துள்ள நிலையில், அதனை அடிப்படையாகக் கொண்டு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எதனையும் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்று சுட்டிக்காட்டிய சம்பந்தன் தரப்பினர், இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். (ம-7)

## உறவு...

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிடுகையில்,

“அமெரிக்காவின் மேரிலான்ட் நகர செனட்டர் கிறிஸ் வேன்ஹோலனை நான் வரவேற்கிறேன்.

கிறிஸ் வேன் ஹோலென் இலங்கையின் நீண்டகால நண்பராவார். இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பை வலுப்படுத்த உழைத்தவர்.

நானும், கிறிஸ் வேன் ஹோலெனும் இணைந்து இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்பில் ஆராயவுள்ளோம்.

அத்துடன், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகளை பற்றி கலந்தாலோசிப்பதோடு, ஜனநாயக விழுமியங்களை நிலை நிறுத்துவதற்கான எமது கூட்டு அர்ப்பணிப்புத் தொடர்பிலும் ஆராய்வோம்.

மேலும், சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று (நேற்று) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சில குடும்ப உறுப்பினர்களை கிறிஸ் வேன் ஹோலென் சந்தித்தார்.

இதன்போது, “நீதிக்கான போராட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுடனும், அவர்களது குடும்பத்தினருடனும் அமெரிக்கா என்றும் துணை நிற்கிறது. இவர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் உறவுகளை எண்ணி கவலையுடனே பயணிக்கின்றனர்.

நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியன கிடைக்கப்பெற வேண்டும்” என கிறிஸ் வேன் ஹோலென் தெரிவித்தார் என அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (ம-7,9)


மெகா பவர்
திகதி 30/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1570
Y 05 09 48 49 57
02251

தன நிதானய
திகதி - 2023.08.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1252
A 09 14 74 79 A
30729

Lucky 7
திகதி 30.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0048
L7 இலக்கம் 2 8
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 5 5 3 0 4 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3464
சீட்டிழுப்பு திகதி 30.08.2023
O 12 30 37 48
O 49153

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.30
சீட்டிழுப்பு இலக்கம் 531
கன்னி 17 20 38 60 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2023/08/30
சீட்டிழுப்பு இலக்கம் 5222
C 6 4 9 2 2 5

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2196 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.08.30 தினம் புதன்கிழமை
05 26 35 62 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,898,500.40
76990 670

சனிதா
திகதி 2023.08.30 வெற்றி வாரம் 4357 வர்ணம் ஊதா
23 29 44 71 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,858,704.00
5 3 8 4 5 9 7 6

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3908 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.08.30 தினம் புதன்கிழமை
39 41 53 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,885,344/-
70156 851

கப்ருக
திகதி 30.08.2023 வெற்றி வாரம் 1372
W 12 20 26 57 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 434,047,324.20
66469 861
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

ஜயோதா
திகதி 2023.08.30 வெற்றி வாரம் 1952 வர்ணம் மஞ்சள்
01 19 28 46 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,714,919.20
86034 685

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2022
சீட்டிழுப்பு திகதி : 2023.08.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,832,312/-
14 22 39 40 S
64570 237


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16840)

076 825 7716 (ஆகாஸ்)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF (16/09/2023)
(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level I,II (16/09/2023)

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1 - 02.09.2023) G.C.E O/L பெறுபேற்றினை
எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
(AA2, AA3 -02/09/2023)

G.C.E A/L பெறுபேற்றினை
எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்

Certificate Course in English

Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917
(C-7144)


## பருத்தித்துறையில் இளைஞன் மீது தாக்குதல்

(கரணவாய்)


இசை நிகழ்ச்சிஒன்றில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக பருத்தித்துறை நகரில் வைத்து இளைஞர் ஒருவர் மீது நேற்று புதன்கிழமை இரவு 7.00 மணியளவில் தாக்குதல் சம்பவம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவத்தில் சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த ஜீவஞாயகம் சிவநேசன் (வயது-29) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

சுப்பர்மடம் பகுதியில் கடந்த 21 ஆம் திகதி இசை நிகழ்ச்சி ஒன்று இடம்பெற்றது. இதில் சுப்பர் மடம் இளைஞர்களுக்கும் வேறு ஒரு இளைஞர் குழுவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் இதன் தொடர்ச்சியாக பருத்தித்துறை நகரில் நின்றிருந்த சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் மீது கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த இளைஞன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர். (ம-7.9.60)



**நல்லூரான் திருமஞ்சம் நேற்று மாலை இடம்பெற்றது**


வீடு வாடகைக்கு உண்டு

நாவற்குழி கேரதீவு பிரதான வீதியில் இருந்து 500 m இல் 'கோவிலாக்கண்டி' பிரதேசத்தில் 4 அறைகள் இணைந்த குளியலறையுடன் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.
வைப்பு பணம் - 150,000/=
வாடகை - 5000/=
(16886)

077 718 4901

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-7167)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

WORK IN UK
WORK PERMITS
CONSTRUCTION WORKERS
5 YEAR WORK PERMITS
குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)
✓ BRICK LAYERS ✓ SHUTTERING CARPENTERS
✓ SHUTTERING JOINERS ✓ STEEL FIXERS
✓ ELECTRICIANS ✓ PLUMBERS
✓ STEEL ELECTORS FOR STRUCTURES
போன்ற துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான உடனடி வேலை வாய்ப்புக்கள்
CIMS COLLEGE 0777-068-777


காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16878)

077 728 6061

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
T.P : 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna.
(16879)

# கண்ணீர் அஞ்சலி

சட்டத்தரணி வைஸ்ணவியின்
அன்புத் தந்தையார்

## அமரர் நாகலிங்கம் சண்முகநாதன் (ராசா)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26.08.1945 | 27.08.2023 |

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும் : Jeyam Real Estate (Pvt) Ltd
ஜெயம் றியல் எஸ்ரேட் (பிறைவேட்) லிமிட்டட்

(16891)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிரெட் ஸ்தாபனத்தரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org